# இலக்கிய ஒளி

ஆசிரியர் :

த. சே. உமாபதி, M. A., L. T., (*Dip-in Geoq-*)

தலைமை ஆசிரியர் :

சி. அப்துல் ஹகீம் இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி
சென்னை—1.

Approved by the Madras Text Book Committee for class use Non-detailed Study Vide Page 30 of upplement to Part I-B of Fort St. George Gazette dated 4–5–1955.

ருத்திரா பதிப்பகம்

சென்னை—1

1956

ரைட்டு] [விலை அணா 14

இரண்டாம் பதிப்பு — 1955
மூன்றும் பதிப்பு — 1956

Printed at the B. N. Press, Mount Road, Madras.

# முன்னுரை

இலக்கியப் பூங்காவில் புக்கு, நறுந்தேன் நுகரும் சுரும்புகளாகப் பொலிதல் இன்றைய மாணவ, மாணவியருக்கு இயலாச் செயலாயிருத்தலை யெண்ணி, 'இலக்கிய ஒளி' எனும் பெயர் கொண்ட இந்நூலில், இலக்கிய நிகழ்ச்சிகள் சில, எளிய இனிய தமிழில் அளிக்கப்பட்டுள்ளன.

சுவை மலிந்த இப்பண்டை நிகழ்ச்சிகளை மாணவ, மாணவியர் படிப்பதால், இலக்கியங்களை முழு வடிவில் படித்தல் வேண்டும் எனும் அவா உந்தப் பெற்றவர்களாய்ப் பிற்காலத்தில் நம் செந்தமிழ் இலக்கியங்களைத் தனித்துப் படித்துணர்ந்து சுவைத்தல் கூடும் என்று நம்பியே இம்முயற்சியில் ஈடுபட்டோம்.

இந்நூலினை மாணவ, மாணவியர் அனைவரும் நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிஞர்கள் துணைசெய்ய வேண்டுகிறோம்.

த. சே. உமாபதி

# உள்ளுறை


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | பத்துப் பாட்டு : | |
| | பட்டினப்பாலை | 1 |
| 2. | எட்டுத்தொகை : | |
| | குறுந்தொகை | 25 |
| | 1. அரிவையின் அச்சம் | 27 |
| | 2. அறநெறி வழுவாத அணங்கு | 30 |
| | 3. அணிலாடு முன்றில் | 33 |
| | 4. கார்ப்பருவங்கண்டு கலங்கிய காரிகை | 37 |
| | 5. கொல்லிமலைப் பாவை | 38 |
| | 6. அறத்தொடு நிற்றல் | 41 |
| | 7. வருந்திய உள்ளம் | 45 |
| | 8. பாணன் பெற்ற பரிசில் | 48 |
| | 9. காளையின் கலக்கம் | 52 |
| | 10. காக்கையின் உதவிக்குக் கைம்மாறு | 54 |
| 3. | பதினெண் கீழ்க்கணக்கு | |
| | கீழ்க்கணக்கு நூல்களின் கருத் தொற்றுமை | |
| 4. | பெருங்கதை : | |
| | நரவாணதத்தன் | 73 |

THE

# 1. பத்துப் பாட்டு

## பட்டினப்பாலை

**தோற்றுவாய் :**

'பட்டினப்பாலை' என்பது கடைச் சங்க காலத்து நூல்களுள் ஒன்று. கடைச் சங்க காலம் இற்றைக்கு ஏறத்தாழ ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்டது என்பது ஆராய்ச்சியாளரின் கருத்து. கடைச் சங்க காலத்து நூல்களாக நமக்குக் கிடைத்துள்ளவை முப்பத்தாறு. அவை மேற்கணக்கு நூல்கள். கீழ்க்கணக்கு நூல்கள் என்னும் இரு பகுப்புக்களுள் அடங்கும். பத்துப் பாட்டு, எட்டுத் தொகை என்னும் பதினெட்டும் மேற் கணக்கு நூல்கள். திருமுருகாற்றுப் படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப் பாலை, மலைபடுகடாம் என்பன பத்துப் பாட்டுக்களாம். இவை பத்தும் ஒரே நூலாகத் தொகுக்கப் பெற்றுப் 'பத்துப்பாட்டு' என்னும் பெயர் வழங்கப்பெற்றுள்ளன. ஆயினும், இவை பத்தும் பற்பல அடிகளால் இயன்ற தனித்தனி நூலேயாம். பட்டினப் பாலை 301 அடிகளால் இயன்ற நூலாகும்.

**நூற்பெயர் :**

'பட்டினப் பாலை' என்னும் தொடருக்குப் பட்டினத்தையும், பாலைத் திணையையும் பற்றிக்

கூறும் பாட்டு அல்லது நூல் என்பது பொருள். இத்தொடரின்கண் உள்ள 'பட்டினம்' என்னும் சொல் காவிரிப்பூம் பட்டினத்தைக் குறிப்பதாகும்; 'பாலை' என்னும் சொல், ஐந்திணைகளுள் ஒன்றாகிய பிரிதலும், பிரிதல் நிமித்தமும் என்று கூறப்படும் பாலைத்திணையைக் குறிப்பதாகும்.

**பாட்டுடைத் தலைவன் :**

பொருள் தேடும்பொருட்டு வேற்று நாட்டுக்குச் செல்ல விழைகின்றான் ஒருவன். அவன் தன் மனைவியின்பாற் பேரன்பு பூண்டவன். எனவே, அவளைப் பிரிந்து செல்ல் அவனுக்கு மனம் இல்லை. அவளை உடனழைத்துச் செல்லலாம் எனில், அவனது நாட்டுக்தம், அவன் செல்லவேண்டிய நாட்டுக்கும், இடை வழியில் உள்ள பாலை நிலம் இன்னல்கள் நிறைந்தது. எனவே அவன் தன் மனைவியை உடன்கொண்டு செல்லவும் துணியாமல், வீட்டில் விட்டுப் பிரிந்தேகவும் விரும்பாமல் தனது நெஞ்சை நோக்கிக் கூறுகிறான்: "நெஞ்சமே, எனது பொருள் தேடும் முயற்சியின் பயனாகத் திருமாளவன் செங்கோல் புரியும் காவிரிப்பூம்பட்டினத்தையே பெருவதாயினும், அவ்வளவனது செங்கோலைப் போலக் குளிர்ந்த தோள்களையுடைய என் தலைவியைப் பிரிந்து,அவ்வளவனது வேலைக்காட்டிலும் வெம்மை மிக்க கானத்தைக் கடந்து வாரேன்," என்று கூறிப் பொருள் தேடும் பொருட்டு வேற்று நாட்டுக்குப் போகும் முயற்சியைக் கைவிடுகிறான் அவன். இச்செய்தியைக் கொண்டு

இயன்ற நூலே பட்டினப்பாலை என்பது. எனவே, இந்நூலின் பாட்டுடைத் தலைவன் திரு மாவளவன் என்பது வெளிப்படை.

**ஆசிரியர் :**

பட்டினப்பாலையை இயற்றியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்பவர். இவர் பத்துப் பாட்டுக்களுள் இப்பட்டினப் பாலையே யன்றிப் பெரும்பாணாற்றுப்படையையும் இயற்றியுள்ளார். கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் இவரதுபெயரில் இடம்பெற்றுள்ள 'கடியலூர்' எனும் சொல், இவரது ஊரைக் குறிப்பதாகும். 'உருத்திரன்' என்பது இவருடைய தந்தையாரின் பெயராக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இதற்குக் காரணம் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய குறுந்தொகைச் செய்யுட்களை இயற்றிய ஆசிரியர்களுள் உருத்திரனார் என்பவரும் ஒருவராவர். எனவே, ஆசிரியரின் இயற்பெயர் கண்ணனார் என்பது சிலர் கருத்து.

உருத்திரங்கண்ணனார் திருமாலிடத்து அன்பு பூண்டவர் என்பது அவர்தம் நூல் வாயிலாகத் தெரிகிறது. தொண்டைமான் இளந்திரையனும், திருமாளவளவனும் இப்பாவலரை ஆதரித்த காவலர் ஆவர். தன்மீது இயற்றப் பெற்ற இப்பட்டினப்பாலையைக் கேட்டு மகிழ்ந்த திருமாவளவன், உருத்திரங்கண்ணனாருக்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசு அளித்தான் என்பது அறியத் தக்கது. உருத்திரங்கண்ணனார் காலம் கடைச்சங்க காலம் என்பது வெளிப்படை.

இப்பட்டினப் பாலைக்குப் பண்டைய உரையாசிரியர்களுள் ஒருவரான **நச்சினார்க்கினியர்** உரை இயற்றியுள்ளார். அவ்வுரை எல்லார்க்கும் எளிதில் விளங்காது. எனவே, இந்நூலுக்கு இக்காலத்தவர் சிலர் எளிய நடையில் உரை எழுதியுள்ளனர். இவற்றின் துணை கொண்டு இந்நூலை எல்லாரும் படித்து இன்புறலாம்.

**நூற்பொருள் :**

இனி இந்நூலின்கண் கூறப்பட்டுள்ள செய்திகளைத் தொகுப்பு முறையிற் காணலாம். இதன்கண் இதன் ஆசிரியர் உருத்திரங்கண்ணனார், முதலிற் சில அடிகளால் காவிரியாற்றின் பெருமையைக் குறிக்கின்றார்; பின்னர், சில அடிகளால் காவிரியாற்றின் நற்பயனைப் பெற்றிலங்கும் சோழ நாட்டை வருணிக்கின்றார்: அதன் பின்னர், பற்பல அடிகளால் சோணாட்டின் கோநகரையும், துறைமுகப் பட்டினமாயும் திகழ்ந்த காவிரிப்பூம் பட்டினத்தின் சிறப்புக்களைப் புகழ்கின்றார்; இறுதியில் அப்பட்டினத்தைத் தனது கோநகராய்க் கொண்டு குடிபுரந்த திருமாவளவனுடைய பெருமைகளைப் போற்றி நூலை முடிக்கின்றார். இவற்றை இனி முறையே சற்று விரிவாக நோக்குவோம் :

**காவிரியாறு :**

தமிழ் நாட்டின்கண் பாயும் யாறுகளுள் தலைசிறந்தது காவிரி. இதனை **'ஏழ்தலம் புகழ் காவேரி'** என்று **அருணகிரியார்** புகழ்ந்துள்ளார். இது

மேற்கு மலைத்தொடரைச் சார்ந்த குடகு மலையில் உற்பத்தியாகிறது. அங்கிருந்து மைசூர்ப் பீட பூமியின் மூலம் ஓடுகிறது. இதன் சமவெளிப் போக்கில் சோழநாட்டில் (திருச்சி—தஞ்சை மாவட்டங்களின் விளை நிலங்களில்)தனது புனலைப் பரப்பி அதனை வளம் கொழிக்குமாறு செய்கின்றது.

காவிரியாற்றின் சிறப்பு இது மட்டுமன்று: இதைக் காட்டிலும் மேம்பட்ட மற்றொரு சிறப்பும் காவிரிக்கு உண்டு. வடக்கே சாய்ந்து மழைக் குறி காட்டும் சுக்கிரன் என்னும் விண்மீன், தெற்கே சாய்ந்து நின்று, மழைத்துளிகளையே உண்டு வாழும் வானம்பாடிப் புட்கள் தவிக்குமாறு, மழையானது பொய்த்துப் பஞ்சம் உண்டாகும் காலத்திலும், காவிரியாறு பெருக்கெடுத்து வந்து சோணாட்டைப் புரப்பதே அதன் பெருஞ் சிறப்பாகும். இக் கருத்துக்களை உருத்திரங்கண்ணனார் கூறும் கீழ்வரும் அடிகளிற் காண்போம்:

> “வசையில்புகழ் வயங்குவெண்மீன்
> திசைதிரிந்து தெற்குஏகினும்,
> தன்பாடிய தளிஉணவின்
> புள்தேம்பப் புயல்மாறி
> வான்பொய்ப்பினும் தான்பொய்யா
> மலைத்தலைய கடற்காவிரி
> புனல்பரந்து பொன்கொழிக்கும்...”

(குறிப்புரை: வசையில் புகழ்—குற்றமற்ற புகழ்; வயங்கு—விளங்குகின்ற; வெண் மீன்—சுக்கிரன்;

திசை-(வட) திசை; திரிந்து-மாறுபட்டு; தளிஉண வின்—மழைத்துளியையே உணவாக உடைய; தன் பாடிய புள்—தன்னைப் (வானத்தை) பாடிய வானம் பாடி என்னும் பறவை; தேம்ப—வருந்த; புயல் மாறி—மழை பெய்யாமல் தவிர்ந்து; வான்—மேகம்; பொய்ப்பினும்—பொய்யாமற் பஞ்சம் உண்டானாலும்; மலை—குடகு மலை; தலைய—ஆரம்பத்தை உடையது; கடல்—கடலிற்சேர்வது.)

## சோழ நாடு :

இத்தகைய காவிரி பாயும் சோணாட்டைப் பற்றிப் புலவர் மேலே கூறுகின்றார். சோணாடு பல்வகை வளங்கள் மலிந்த பாக்கங்களையும், ஒன்றற்கொன்று அணித்தே அமைந்த சிற்றூர்களையும் உடையது. இப்பாக்கங்களும், சிற்றூர்களும் கழனிகளால் சூழப் பெற்றுள்ளன. அக்கழனிகளில் நெற்பயிர் கதிர் விட்டுக் காட்சியளிக்கின்றது. இடையிடையே கணு முற்றிய கரும்பு வயல்களும் உள்ளன. அவ்வயல்களில் விளையும் கருப்பங்கழிகளை உழவர் ஆங்காங்கு ஆலைகளிற் கொடுத்து ஆட்டிச் சாறெடுத்துக் காய்ச்சும் கொட்டில்களினின்று வெளிப்படும் புகையின் வெம்மையால், வயல்களில் உள்ள நெய்தல் மலர்கள் வாட்டமுறுகின்றன. அன்றியும், நெல் வயல்களிற் காய்த்து முற்றிக் காணப் பெறும் கதிர்களை எருமைக் கன்றுகள் வயிறு புடைக்கத் தின்றுவிட்டு அசைய முடியாமல் நெற்கூடுகளின் நிழலில் துயில்கின்றன.

இதுவன்றியும், பாக்கங்களிலும் ஊர்களி

லும் உள்ள வீடுகளின் பின்புறங்களில் தோட்டங்களும், தோப்புக்களும் இருக்கின்றன. அவற்றில் குலைகளைத் தாங்கி நிற்கும்தெங்குகள் இடம் பெற்றுள்ளன. தாறுகளையுடைய வாழைகள் வளம்பெறக் காட்சியளிக்கின்றன. கமுகு மரங்கள் பாக்குக் குலைகளைப் பாங்குறத் தாங்கி நிற்கின்றன. இவையே யன்றி, மாமரங்களும் பனைமரங்களும் ஆங்குண்டு. இத்தகைய பல்வகை மரங்கள் செறிந்த தோப்புக்களில் அடி பரந்த சேம்பும், முளை பொருந்திய இஞ்சியும் பயிரிடப் பெற்றுள்ளன. இவ்வருணனையைப் புலவர் வாக்கிற் கீழே காண்போம் :

''விளைவு அருவியன்கழனிக்
கார்க்கரும்பின் கமழ்ஆலைத்
தீத்தெறுவிற் கவின்வாடி
நீர்ச்செறுவின் நீள்நெய்தல்
பூச்சாம்பும் புலத்(து) ஆங்காண்
காய்ச்செந்நெல் கதிர் அருந்தும்
மோட்டெருமை முழுக்குழவி
கூட்டுநிழல் துயில்வதியும்.
கோள்தெங்கின் குலைவாழை
காய்க்கமுகின் கமழ்மஞ்சள்
இனமாவின் இணர்ப்பெண்ணை
முதற்சேம்பின் முளைஇஞ்சி''

(குறிப்புரை : விளைவு அரு—விளைச்சல் நீங்காத, வியல்—அகன்ற, கமழ் ஆலை—நறுமணம் வீசும் பாகு காய்ச்சும் ஆலை, தீ-நெருப்பு, தெறுவின்—சுடுதலினாலே, சாம்பும்-வாடும், மோட்டெருமை

–பருத்தவயிற்றை உடைய எருமை, முழுக் குழவி —பெரிய கன்று, கூட்டு நிழல்—நெல் சேகரித்து வைக்கப்படும் களஞ்சியத்தின் நிழல்.)

## செல்வ நிலை :

கருப்பஞ்சாறு காய்ச்சப்படும் இடத்தினின்று எழும் புகையால் கழனிகளில் உள்ள நெய்தல் மலர்கள் வாட்டமுறுகின்றன என்றும், நெற் கதிர்களை அளவின்றித் தின்றமையால் எருமைக்கன்று அசைய முடியாமல் தரையிற் படுத்துக் கிடக்கின்றது என்றும் கூறிச் சோழ நாட்டின் பாக்கம், ஊர் ஆகியவற்றின் நீர் வளத்தையும், நிலவளத்தையும் ஆசிரியர் விளக்கிய பின், அவற்றின் செல்வ நிலையையும் அவர் ஒரு குறிப்பால் வெளிப்படுத்துகின்றார். அதனைக் காண்போம் :

சோழ நாட்டு ஊர்களிலும், பாக்கங்களிலும் உள்ள மனைகள் அகன்று, அழகு நிறைந்து காட்சி அளிக்கின்றன. அவற்றின் பின்புறங்களில் உள்ள தோப்புக்களில் வாழை, தெங்கு, கமுகு, பெண்ணை, மா ஆகிய மரங்கள் குலை தாங்கி நிற்கும் என்பதும், அவற்றின் இடையிடையே சேம்பும் இஞ்சியும் இடம் பெற்றிலங்கும் என்பதும் முன்னரே குறிக்கப்பட்டுள்ளன. எனவே அம்மனைகளின் முன்புறங்களைப் பற்றிப் புலவர் ஈண்டுக் கூறுகின்றார். அம்மனைகளின் முன்னே மிகப் பரந்த முற்றங்கள் உள்ளன. அம் முற்றங்களில் நெல் உலர்த்தப்படுகிறது. நெல்லைப் பறவையினங்கள் கொள்ளை கொண்டு

செல்லாமல் பாதுகாக்க அம்முற்றங்களில் பெண்கள் அமர்ந்திருக்கின்றார்கள். அவர்கள் ஒளி பொருந்திய நெற்றியையும், மடப்பம் பொருந்திய பார்வையையும் உடையவர்களாய், அழகிய அணிகலன்கள் தரித்தவர்களாய் விளங்குகின்றார்கள். அவர்கள் நெல்லுக்குக் காவல் புரிவதைக் கவனியாமல், கோழிகள் ஆங்கு வந்து நெல்லைத் தின்னுகின்றன. உடனே அப்பாவையர் அக்கோழிகளின் மீது சீற்றங் கொண்டு, அவற்றைக் கல்லால் எறிய விரும்பி அங்குமிங்கும் பார்க்கின்றனர். அவர்கட்குக் கல் ஏதும் கிடைக்கவில்லை. அவற்றின்மீது எழுந்த சீற்றமோ, எல்லையை மீறிவிட்டது. உடனே அவர்கள் தங்கள் காதுகளில் அணிந்திருந்த கனத்த குழை என்னும் காதணியைக் காதுகளினின்றும் அகற்றிக் கையிற் கொண்டு, கோழிகளின் மீது எறிந்து அவற்றை விரட்டுகிறார்கள். கோழிகள் ஓடிவிடுகின்றன. காதணிகள் முற்றங்களில் கிடக்கின்றன. அவை சிறுவர்கள் குதிரையின்றி உருட்டிக்கொண்டு வரும் மூன்று சக்கரங்களை உடைய சிறிய தேர்கள் செல்லவொட்டாமல் தடை செய்கின்றன. இதனால் சோழநாட்டு மக்களின் செல்வநிலை நன்கு புலப்படுகின்றதன்றோ?

அங்கு வாழும் மக்கள் எவ்வகை அச்சமுமின்றி வாழ்கின்றார்கள். அவர்களைக் கண்டு அச்சத்தால் விலகும் பகைவரையன்றி, அவர்கள் அச்சமுற்றுக் கலங்கி, அகலத்தக்க பகைவர்கள் ஆங்கில்லை. அத்தகைய செழிப்பினை உடைய

*பாக்கங்களையும், பல ஊர்களையும் உடையது சோணாடு. இக்கருத்துக்களை ஆசிரியர் உருத்திரங் கண்ணனார் வாக்கிற் காணலாம் :*

> "அகநகர் வியன்முற்றத்துச்
> சுடர்நுதல் மடநோக்கின்
> நேரிழை மகளிர் உணங்குணாக் கவரும்
> கோழி யெறிந்த கொடுங்கால் கனங்குழை
> பொற்கால் புதல்வர் புரவியின்(று) உருட்டும்
> முக்கால் சிறுதேர் முன்வழி விலக்கும்
> விலங்குபகை யல்லது கலங்குபகை யறியாக்
> கொழும்பல்குடிச் செழும்பாக்கத்து
> குறும்பல்லூர் நெடுஞ்சோணாடு."

அரும்பத உரை : *அகல் நகர்—அகன்ற மனையின், வியல் முற்றத்து—பரந்த முன்னிடத்தே, சுடர்—ஒளி, உணங்கு—(வெயிலில்) உலருகின்ற உணா—நெல்லை, எறிந்த—(ஓட்டுமாறு) வீசிய, குழை—காதணி, பொன்கால்—அழகிய கால்களை உடைய, புரவி இன்று உருட்டும்—குதிரை பூட்டப் பெருமல் கையால் உருட்டிச் செலுத்துகின்ற, முக்கால்—மூன்று சக்கரங்கள், முன்வழி விலக்கும்—வழியின் முன்னே நின்று தடுக்கும். விலங்கு பகை—(தம்மைக்கண்டு) அச்சத்திஞல் விலகிச் சென்று விடுகின்ற பகைவர், கலங்கு பகை—(தாம் மனம் கலங்கி அஞ்சி ஓடுவதற்குக் காரணமாகிய பகைவர், செழும்பாக்கம்—செழுமை பொருந்திய பாக்கம், குறும்பல்லூர்—நெருங்கிய பல ஊர்கள் )*

## காவிரிப்பூம்பட்டினம்

*உருத்திரங்கண்ணனார் தாம் இயற்றிய*

நூலுக்குப் **பட்டினப்பாலை** என்னும் பெயர் வழங்கியதற்குக் காரணம், அந்நூலின் பெரும்பகுதியில் காவிரிப்பூம்பட்டினத்தின் பெருமைகள் அமைந்திருப்பதேயாகும். எனவே காவிரிப்பூம்பட்டினத்தின் அருமை பெருமைகளை ஈண்டுக் காணலாம் :

**தோப்புக்களும் சாலைகளும் :**

வெண்ணிறமுள்ள உப்பைப் படகுகளிற் கொண்டு சென்று விற்பனை செய்துவிட்டு, அதற்குப் பதிலாக நெல்லை ஏற்றிக்கொண்டு வரும் படகுகள் வரிசை வரிசையாக நிற்கும் கழிகளை உடைய தோட்டங்கள் அப் பட்டினத்தைச் சூழ்ந்துள்ளன. அன்றியும் மா, பலா முதலிய பழ மரங்கள் நன்கு காய்த்தலால், அதன் பயனைப் புது வருவாயை மக்கள் அடையும்படி செயகின்ற தோப்புக்களும், பூஞ்சோலைகளும் அதனைச் சூழ்ந்துள்ளன.

மேலும், அப்பட்டினத்தில் பொய்கை ஒன்று உண்டு. அப்பொய்கையின் அருகில் **சந்திரன் கோயில்** ஒன்றும் இருக்கிறது. அக்கோயிலும், அதன் அருகில் பொய்கையும் இருப்பது, வானத்தில் மக நட்சத்திரமும் அதன் அருகில் பிறைச் சந்திரனும் தங்கியிருத்தல் போன்றுள்ளது என்கிறார் புலவர். இப்பொய்கையேயன்றி, அப்பட்டினத்திற் **சோமகுண்டம், சூரியகுண்டம்** என்னும் ஏரிகளும் இருக்கின்றன.

அன்றியும் அப்பட்டினம் புலியின் உருவம்

பொறிக்கப்பெற்ற வலிய கதவுகளை உடைய உயர்ந்த மதிலால் சூழப் பெற்றுளது.

**அறச்சாலைகள் :**

அப்பட்டினத்தின்கண் இம்மைக்குரிய புகழை எங்கும் பரப்புவதற்கமைந்த அறச்சாலைகள் பல உண்டு. அவ்வறச் சாலைகளின் சமையலறைகளினின்று சோறு வடித்த கஞ்சி, யாறு போலப் பரந்து சென்று பாய்கின்ற இடங்களில் எருதுகள் ஒன்ருேடொன்று போரிடுகின்றன. அதனுல் அவ்விடங்கள் சேருகின்றன. அச்சேற்றின் மீது தேர்கள் செல்கின்றன. அச்செலவினுல் சேற்றில் ஈரம் புலர்ந்து, துகள் தோன்றி, அருகில் உள்ள கோயிலின் மீது படிவதால் அக்கோயில் திருநீறு பூசப்பட்ட யானைபோலக் காட்சியளிக்கின்றது. இதனைப் புலவர் வாக்கிற் காண்க :

"சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி,
ஏறுபொரச் சேருகித்
தேரோட்டத் துகள்கெழுமி
நீருடிய களிறுபோல
வேறுபட்ட வினையோவத்து
வெண் கோயில் மாசூட்டும்."

அரும்பத உரை : வாக்கிய—வடித்து ஒழுக்கிய, ஏறுபொர—எருதுகள் போரிட, துகள் கெழுமி—தூசாகப் பொருந்தி, நீருடிய—திருநீறு பூசிய, வேறுபட்ட—வெவ்வேறு வகையான, வினை ஓவத்து—வேலைப்பாடுகள் நிறைந்த சித்திரங்களை உடைய, வெண்கோயில்—சுண்ணும்பு பூசப்பெற்ற

வெண்மையான கோயில், மாசூட்டும்—மாசுபடியச் செய்யும்.)

**எருதுச் சாலைகள் :**

காவிரிப்பூம்பட்டினத்தில் எருதுகள் கட்டுவதற்குரிய பல கொட்டில்கள் உள்ளன. அவை மிகவும் பரந்து கிடத்தலின், எருதுகள் நீர் குடிப்பதற்கான சிறு குளங்கள் அக்கொட்டில்களின் முற்றத்திலேயே இடம் பெற்றுள்ளன.

**தவப் பள்ளிகள் :**

அப்பட்டினத்தில் இளமரப் பூங்காக்கள் பல உண்டு. அவை குயில்களின் இருப்பிடமாகவும், தவப் பள்ளிகளின் இருப்பிடமாகவும் இலங்குகின்றன. அத்தவப் பள்ளிகளில் வாழும் முனிவர்கள், ஓம குண்டங்களில் தீ வளர்த்து, அதில் பலவகை ஆவுதிப் பொருள்களை இடுகிறார்கள். அதனால் அவ்வோம குண்டங்களினின்று புகை மிகுதியாக எழுகின்றது. அப்புகையை அங்குத் தங்கியிருக்கும் குயில்கள் வெறுக்கின்றன. ஆதலால் அவை, தம்முடைய பெட்டைகளோடு அவ்விடத்தை விட்டு, கல்லைத் தின்று உயிர் வாழும் புறாக்கள் தங்கியிருக்கும் ஓங்கி வளர்ந்த பழமை மிக்க மரங்கள் நிறைந்த சோலைகளை நாடிச் சென்று தங்குகின்றன.

**புறச்சேரி :**

புறச்சேரி என்பது, மீன் பிடித்து வாழும் பரதவர் தங்கும் கடற்கரையைச் சார்ந்த இடம். இத்தகைய புறச்சேரியில் வாழும் பரதவரின்

வாழ்க்கையை ஆசிரியர் வருணிப்பதைக் காண்போம் : கருமை நிறம் பொருந்திய பரந்த மணல் மேடுகளில் பரதவர் தம் சுற்றத்தவரோடு வாழ்கின்றனர். அங்குப் பனைமரங்கள் வரிசை, வரிசையாகக் காட்சியளிக்கின்றன. பன்றிகள் தம் குட்டிகளுடன் இங்குமங்கும் உலாவுகின்றன. பற்பல இனக் கோழிகளும் வசிக்கின்றன. களிமண்ணால் வட்டமாக வளைந்து, சூளையில் இட்டுச் சுடப்பட்ட உறைகள் வைத்துக் கட்டப்பெற்ற கிணறுகள் ஆங்காங்குக் காணப்படுகின்றன. கடற்கரையில் வாழும் பரதவர்க்கு அக்கிணறுகளே குடிநீர் நல்குகின்றன.

இத்தகைய இடத்தில் வாழும் பரதவர், தாங்கள் கடலினின்று பிடித்துக்கொண்டு வந்த இருல்களைச் சுட்டு, அவற்றின் இறைச்சியையும், வயல்களினின்றும் பிடித்துக்கொண்டு வந்த ஆமைகளின் புழுக்கின இறைச்சியையும் தம் இனத்தவரோடு இருந்து உண்டு களிக்கின்றனர். பின்னர் வறண்ட மணலிற் படர்ந்து கிடக்கும் கொடியின் மலரையும், நீர் நிலைகளில் உள்ள ஆம்பல் மலரையும் பறித்துச் சூடிக் கொள்கின்றனர். பெண்களேயன்றி, ஆண்களும் இம்மலர்களைச் சூடிக்கொள்கின்றனர் என்பது அறியத் தக்கது. பின்னர் எல்லாரும் சென்று ஊரின் புறத்தே உள்ள அகன்ற மணற் பரப்பில் கூடுகின்றனர். அவர்களுள், ஆண் மக்கள் பொழுது போக்குகாகப் போர் புரிகின்றார்கள். இங்ஙனம் அவர்கள் அங்குக் கூடியிருப்பதை ஆசிரியர், நட்சத்திரங்களும் நவக்கிரகங்

களும் வானவெளியிற் கூடியிருப்பதற்கு உவமை கூறுவது பாராட்டத் தக்கதாகும். போர் புரிந்த பிறகும், தங்கள் தோள்களின் தினவு அடங்காமையால், தங்கள் கைகளிற் கவண் கொண்டு கற்களை வீசி மகிழ்கின்றனர். இக் கல்வீச்சைக் கண்டு, அங்கு வாழும் பறவைகள் அஞ்சி அகல்கின்றன. இத்தன்மைகள் வாய்ந்த புறஞ்சேரியை உடையது காவிரிப்பூம்பட்டினம் என்று கூறுகின்றார் ஆசிரியர்.

**துறைமுகப் பண்டசாலை :**

புறஞ்சேரியைப்பற்றிக் கூறிய பின்னர், ஆசிரியர் காவிரிப்பூம்பட்டினத்தின் துறைமுகத்தையும், ஆங்கிருந்த பண்டசாலையையும் வருணிக்கத் தொடங்குகின்றார். காவிரி நதி கடலோடு கலக்கும் இடத்தில் அமைந்திருக்கிறது கப்பல்கள் வந்து தங்கும் கடற்கரை. அத்துறையின் ஓரமாக அகன்ற முற்றங்களை உடைய பண்டசாலைகள் அமைக்கப் பெற்றுள்ளன. அப்பண்டசாலைகளின் வாயில்களில் சுங்கக்காவலர் நின்று காவல்புரிகின்றனர். ஏற்றுமதிக்காகவும், இறக்குமதிக்காகவும் துறைமுகத்துக்கு வரும் மூட்டைகளுக்குச் சுங்கத் தீர்வை விதிக்கப்பட்ட பின், அவற்றின்மீது அரசனது புலி உருவம் தாங்கிய இலச்சினை பொறிக்கப்படுகின்றது. இதற்கெனத் தனி அலுவலாளர்கள் இருக்கின்றனர். இவர் அனைவரும் தினந்தோறும் சிறிதும் சோர்வின்றித் தம் அலுவல்களைக் கவனிக்கின்றனர். துறைமுகத்துக்கு வரும் ஏற்றுமதி,

இறக்குமதிப் பொருள்களை ஆசிரியர் ஓர் உவமை யால் விளக்குகின்றார்,

கடலின் மூலம் கலங்களில் கொண்டுவரப் பட்ட பொருள்கள், உள்நாட்டுக்கு அனுப்பப் படுவதும், உள்நாட்டினின்று கொண்டு வரப் படும் பொருள்கள் கலங்களில் ஏற்றி அனுப்பப் படுவதும் மழைக்காலத்தில், மேகம் கடலி னின்றும் நீரைக் கொண்டுபோய் மலைமீது பொழிவதும், மலைமீது மழையாகப் பொழியப் பட்ட நீர், மீண்டும் கடலை வந்து அடைவதும் போல இருந்தது என்று ஆசிரியர் விளக்குவது படித்து இன்புறத் தக்கது. அவ்வடிகளைக் கீழே காண்க :

''வான்முகந்தநீர் மலைப்பொழியவும்
மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவும்
மாரிபெய்யும் பருவம்போல,
நீரினின்று நிலத்தேற்றம்,
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்...

(அரும்பதவுரை : வான்முகந்த நீர் — மேகம் தான் முகந்தநீரை, நீரில்நின்று நிலத்து ஏற்றவும்— கலத்தில் வந்த பொருள்கள் உள்நாட்டுக்கு இறக்கு மதி செய்யவும், நிலத்தினின்று நீர் பரப்பவும் — உள்நாட்டினின்று வந்த பொருள்கள் ஏற்றுமதி செய்யவும்)

**வீதிகள் :**

துறைமுகத்தை வருணித்த பிறகு, ஆசிரியர், காவிரிப்பூம்பட்டினத்தின் வீதிகளைப் பற்றிக்

கூறுகின்றார். அப்பட்டினத்தின் கடைவீதி மிக வும் அகன்றிருக்கிறது. அதன்கண் உள்ள வீடுகளுக்குப் பல படிகள் அமைந்த திண்ணை கள் உள்ளன. பல கட்டுக்களை உடைய அவ்வீடு களின் வாயில்கள் மிகவும் அகன்றுள்ளன, அன்றியும், அவை பெரிய சாளரங்கள் அமைந்த மாடிகளைப் பெற்றுள்ளன. அப்பட்டினத்தில் திருவிழா நடைபெறுகின்றது. ஆதலால், இறைவர் ஊர்வலமாகக் கொண்டு வரப்படு கின்றார். யாழும், முழவும், முரசும் ஒலிக்கின் றன. இறைவரை வணங்குதற் பொருட்டு மாடியில் உள்ள பெண்கள் தங்கள் கைகளை வெளியே நீட்டிக் கும்பிடுகின்றார்கள். அக்கை களின் காட்சி பூக்குலையை ஒத்திருக்கின்றது என்று, சுவைபடக் கூறுகின்றார்.

இனி ஆசிரியர் அப்பட்டினத்தில், பல்வேறு வகையான கொடிகள் நாட்டப்பட்டிருப்பதை வருணிக்கிறார். காவிரிப்பூம் பட்டினத்தில் கோயில்கள் பல உண்டு. அவற்றின் கோபுர வாயில்கள் பல உண்டு. அக் கோபுர வாயில் களில் பக்தர்கள் வந்து தொழுவதற்குரிய கொடிகள் நாட்டப்பெற்றுள்ளன. கடைகளில் கோல்கள் ஊன்றி அவற்றில் பறக்க விடப்பட் டுள்ள பட்டாலான கொடிகள் கரும்பின் பூவைப் போலக் காட்சியளிக்கின்றன. பல்வேறு கல்வித் துறைகளில் வல்லுநர் தத்தம் பெருமை தோன் றத் தமது இல்லின் முன் நாட்டிய கொடிகள் பல, அப்பட்டினத்து வீதியிற் பலவிடங்களில்

அசையா நிற்கின்றன அன்றியும் துறைமுகத்தில் தங்கியுள்ள மரக்கலங்களின் பாய்மரங்களின் மீது பல்வேறு நிறங்கள் அமைந்த கொடிகள் காணப்படுகின்றன. இவ்வாறு வெவ்வேறு வகையான கொடிகள் வீதியில் நெருங்கி இருப்ப தனால் அங்கு வெயில் விழாமல் நிழல் நிறைந் திருக்கின்றது.

புலவர், அவ்வீதிகளின் பெருமைகளை மேலும் சிறப்பித்து உணர்த்தும் திறத்தைக் காணலாம்: அரேபியா போன்ற வேற்று நாட் டினின்றும் விரைந்து செல்லக்கூடிய குதிரை கள் மரக்கலங்களில் வந்திறங்கியுள்ளன. வண்டி களில் மிளகு மூட்டைகள் வந்துள்ளன. வட திசையின்கண் உள்ள மேரு, இமயம் போன்ற மலைகளில் கிடைக்கும் பலவகைப்பட்ட இரத் தினங்களும், பொன்னும் கொண்டு வரப்பட்டுள் ளன. மேற்கு மலைத்தொடர்களில் தோன்றும் சந்தனக் கட்டையும், அகிற்கட்டையும் அள வின்றிக் கொண்டு வரப்பட்டுள்ளன. தென் கடலிற் கிடைக்கும் முத்தும், கீழ்க்கடலில் அகப் படும் பவழமும், கங்கை காவிரியாகிய யாறு களிற் பிறக்கின்ற பொருள்களும், ஈழ நாட்டி னின்று உயர்ந்தனவாகிய உணவுப் பொருள் களும், பர்மா, சீனம் போன்ற நாடுகளினின்று நறுமணப் பொருள்களும் பேரளவில் தருவிக்கப் பட்டுக் குவிக்கப்பட்டுள்ளன. அவை யாவும் வெவ்வேறு கடைகளில் விற்பனைக்கு வைக்கப் பட்டுக் காட்சியளிக்கின்றன. இவ்வருணனை யைப் புலவர் மொழிகளிற் கீழே காணலாம்:

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்,
காலின் வந்த கருங்கறி மூடையும்,
வடமலை பிறந்த மணியும் பொன்னும்,
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்,
தென்கடல் முத்தும், குணகடல் துகிரும்,
கங்கை வாரியும், காவிரிப் பயனும்,
ஈழத்(து) உணவும், காழகத்(து) ஆக்கமும்,
அரியவும், பெரியவும் நெறிய ஈண்டி,
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு."

(அரும்பத உரை : *நீரின் வந்த — கடல் வழியே வந்த, பரிப்புறவி—விரைந்த நடையுடைய குதிரை, காலின் வந்த — வண்டியில் வந்த, கறி மூடை — மிளகு மூட்டை, ஆரமும் – சந்தனமும், குண கடல்— கிழக்குக்கடல், துகிர்—பவழம், கங்கை வாரி— கங்கையாற்றில் கிடைத்த பொருள், ஈழம்— இலங்கை, காழகம் — பர்மா, தலை மயங்கிய — ஒன்றேடொன்று கலந்த, நனந்தலை — அகன்ற இடம், மறுகு—தெரு,*)

**வணிகர் :**

*இதன் பின்னர் ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்கின்ற வணிகரின் பண்புகளைப் பற்றி விவரிக்கின்றார். அவர்கள் கொலை தவிர்த்தும், வலைஞரையும் கசாப்புக் காரரையும் கொலைத் தொழில் புரியாதிருக்குமாறு அறிவு கொளுத்தியும். கள்வர்களை அக் களவுத்தொழிலினின்றுநீங்கச்செய்வதும்,தேவர்களை வழிபட்டும், வேள்வி புரிந்தும், விருந்தினரை உபசரித்தும் புண்ணியச் செயல்களையே புரிபவராய் வாழ்கின்றனர். அதுவன்றி அவர்*

கள் உழவுத்தொழிலை விரும்பிச் செய்கின்றனர். மேலும் வாணிகம் செய்வதிலோவெனில் பொய்யை நீக்கி, மெய்யையே கூறித் தம்முடைய பொருள்களையும், பிறர் பொருள்களையும் ஒரு தன்மையாக மதித்து, தாம் கொள்ளும் பொருளைத் தாம் கொடுக்கும் விலைக்கு மிகுதியாகக் கொள்ளாமல், தாம் விற்கும் பொருளையும் குறைவாகக் கொடாமல், பல பண்டங்களுக்கும் தாம் அடையும் இலாபத்தை வெளிப்படையாகச் சொல்லி விற்கின்றார்கள். அத்தகைய வணிகர்களின் குடியிருக்கையைக் கொண்டது காவிரிப் பூம்பட்டினம்.

அப்பட்டினம் மற்றொரு சிறப்பினையும் உடையது. அதன்கண் வெவ்வேறு மொழிகளைப் பேசும் வெவ்வேறு நாடுகளினின்று வந்த மக்கள் அப்பட்டினத்தைச் சேர்ந்த மக்களோடு பழகிக் கலந்து உறவாடி வாழ்கின்றார்கள். அவர்கள் வாழ்க்கை, திருவிழா நடக்கும் ஊரிலே வேறு வேறு ஊரிலிருந்து வந்து கூடிக் கலந்துறையும் அறிஞர் வாழ்க்கையை ஒத்திருக்கிறது என்று புலவர் ஓர் உபமான முகத்தாற் கூறுகின்றார்.

இவ்வாறு காவிரிப்பூம் பட்டினத்தைப் புகழ்ந்து கூறும் புலவர், பின்னர் அப்பட்டினத்தை ஆளும் திருமாவளவன் பெருமைகளைக் கூறத் தொடங்குகின்றார்.

திருமாவளவன், புலியைக் கூட்டில் அடைத்து வைப்பது போலத் தன்னுடைய

பகைவர்களால் சிறை வைக்கப்பட்டான். அதனால் அவன் சிறிதும் அச்சம் அடையவில்லை. அதற்கு மாறாக அவனது நெஞ்சம் வயிரமேறியது. எனவே, ஆண் யானையொன்று, தன்னை அகப்படுத்திய குழியின் கரையைத் தன்னுடைய தந்தங்களால் இடியும்படி குத்தி, அக்குழியைத் தூர்த்து வெளியேறியது போல, அவன் தனது கூரிய அறிவினால் காலமறிந்து சிறையைத் தகர்த்து வெளியேறிக் காவலரைக் கொன்று தனது அரசுரிமையைப் பெற்றான். அதனோடு அமையாது, நால்வகைப் படையோடு சென்று, தன் பகைவரை ஒழித்தான். அவர்தம் நாட்டையும் அழித்தான். அதன் திறம்கேட்ட ஒளி நாட்டார், அருவாளர், வடவர், குடவர் முதலியவர் அவனுக்கு அஞ்சி அடங்கினர். அன்றியும் திருமாவளவன் ,பாண்டியனையும், இருங்கோவேள் என்ற மன்னனையும் அடக்கினான்.

பின்னர் அவன் காடாக இருந்த இடங்களை நாடாக்கினான்; அந்நாட்டைக் குளங்கள் வெட்டி வளப்படுத்தினான். தனது கோநகராகிய உறையூரை விரிவுற அமைத்தான். அதைச்சுற்றிலும் மதில்கள் எழுப்பினான். அதன்கண் பெரியவையும், சிறியவையுமான வாயில்கள் இடம் பெறச் செய்தான். உறையூரிற் பல கோயில்களைக் கட்டிப் பண்டுபோல, அதன்கண் குடிகளை நிலை நிறுத்தினான். இவ்வாறு, தான் தனியே நின்று பகைவர்க்குப் புறம்கொடாது வீரத்திருமகளைத் தன்னிடமே நிலைபெற்றிருக்குமாறு செய்து,

பேரும் புகழும் பெற்று விளங்கினன் திருமா வளவன்.

அத்தனை சிறப்புக்கள் வாய்ந்த திருமாவள வன் பகைவர் மீது போக்கிய வேலைக் காட் டிலும் கொடியது தலைவன் செல்வதற்கமைந்த கானம். அவ்வளவன் தன்னுடைய குடிமக்களைப் புரக்கக் கையிற்கொண்ட செங்கோலைக் காட் டிலும் அமைதி தரத்தக்கது தலைவியுடன் இல் லத்தில் இருந்து இன்புற்று வாழ்வது. எனவே திருமாவளவனால் ஆளப்பட்ட காவிரிப்பூம் பட்டினமே பரிசாகக் கிடைப்பினும் தன் தலைவி யைப் பிரிந்து வரமுடியாது என்று தலைவன் தனது நெஞ்சத்துக்குச் சொல்லுவதாகக் கூறி நூலை முடிக்கின்றார் புலவர். அம் முடிபை அறி விக்கும் அடிகளை ஈண்டுக் காண்க :

**முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்**
**வார்இருங் கூந்தல் வயங்கிழை ஒழிய**
**வாரேன் வாழிய நெஞ்சே!''**

(அரும்பதவுரை : முட்டாச் சிறப்பு—குறையாத சிறப்பு, பட்டினம்—காவிரிப்பூம்பட்டினம், வார் இரும் கூந்தல்—நீண்ட கரிய கூந்தல், வயங்கு இழை—விளங்குகின்ற ஆபரணங்கள் உடைய தலைவி, ஒழிய—பிரிந்திருக்க,)

பட்டினப்பாலை என்னும் இந்நூலின்கண் அமைந்துள்ள கருத்துக்கள் தொடர்பாகவும் சுருக்கமாகவும் ஈண்டுத் தரப்பட்டன. இவற் றைப்படித்தபின்னர் மாணவ, மாணவியர் முதல் நூலையே படித்து இன்புறுவதன்றித் தங்கள் தமிழறிவையும் பெருக்கிக் கொள்வார்களாக.

# 2. எட்டுத் தொகை

## குறுந்தொகை

தோற்றுவாய் :

இற்றைக்குச் சுமார் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்பு நம் தமிழன்னை வளங்கெழு மதுரையில் இருந்து ஆட்சி புரிந்தனள் என்பதை நாம் அறிவோம். தமிழகத்தின் பெருமை தரணியெங்கும் பரந்து பரணிபாடிக்கொண்டிருந்த காலம் அது. அவளுடைய அரும்பெறற் புதல்வராம் சேர, சோழ, பாண்டியர் நால்வகைப் படைகளின் துணைகொண்டு நானிலத்தை வென்று நல்லாட்சி புரிந்துகொண்டிருந்த காலம் அது. அந்தக் காலத்தைத் தமிழகத்தின் பொற்காலம் எனத் தயக்கமின்றிக் கூறலாம். அக்காலத்தில் பாண்டிய மன்னரின் கோநகராகிய மதுரையம்பதியில் நிலைபெற்றிருந்த தமிழ்ச்சங்கத்தின் பொய்யடிமையில்லாப் புலவர் பெருமக்கள், தாம் இயற்றிய செந்தமிழ் நூல்களால் நம் தமிழ் அன்னையை அணிசெய்து அகமகிழ்ந்தார்கள். அங்ஙனம் அக்காலத்தில் நம் அருந்தமிழன்னையை அலங்கரித்த நூல்களே பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்பவை

அவற்றுள் எட்டுத்தொகை யென்பது இடத்தாலும், காலத்தாலும், சமயத்தாலும் வேறுபட்டபல்வேறு புலவர்கள் இயற்றிய செய்

-யுட்களைத் தொகுத்து அமைக்கப்பெற்ற எட்டு நூல்களைக் குறிப்பிடும். அவை நற்றிணை, குறுந் தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித் தொகை, அகநானூறு, புறநானூறு என்பன.

"நற்றிணை, நல்ல குறுந்தொகை, யைங்குறுநூ(று),
ஒத்த பதிற்றுப்பத்( து, ஓங்கு பரிபாடல்,
கற்றறிந்தாரேத்தும் கலியோ(டு), அகம், புறமென்(று)
இத்திறத்த எட்டுத் தொகை.

என்ற செய்யுள் எட்டுத்தொகையில் அடங்கி யுள்ள நூல்களின் பெயர்களைக் குறிக்கின்றது. அவற்றுள், 'நல்ல குறுந்தொகை' யென நாவல ரால் நவிலப்பட்ட நற்றமிழ்நூல், அகப்பொரு ளைப்பற்றிய நானூற்றொரு செய்யுட்களையும், கட வுள் வாழ்த்துச் செய்யுள் ஒன்றையும் கொண்டு விளங்குகின்றது.

அகப்பொருளாவது, பண்டைத் தமிழ் மக் களது இன்பமிக்க இல்வாழ்வின் இயல்பை எடுத்தியம்புவது. நான்கடி முதலாக, எட்டடி ஈறாகவுள்ள ஆசிரியப் பாக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்ற காரணத்தால், இந்நூல் 'குறுந்தொகை' யெனப்பட்டது. குறுகிய பாக் களால் தொகுக்கப்பெற்ற நூல் என்பது இதன் பொருள். தேன் போன்று, தீஞ்சுவை பொருந் தித் திகழும் இந்நூலில் உள்ள சில செய்யுட் களின் மூலம் செந்தமிழ் நாட்டினரின் சிறப்பு மிக்க வாழ்க்கை நிலையை எடுத்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 1. அரிவையின் அச்சம்

முகிற்கூட்டங்கள் சூழ்ந்து விளங்கும் குன்றினை அடுத்துள்ள ஒரு சிற்றூரில் வாழ்கின்ற மங்கை நல்லாள் ஒருத்தி ஒரு நாள் மாலைப் பொழுதில் சோலையில் மலர் கொய்துகொண்டிருந்தாள். அப்போது, அவள் இடி முழக்கம் போன்ற பேரொலியைக் கேட்டு உள்ளம் கலங்கினாள். ஒலியெழுந்த திசையை நோக்கிய அவள், கருமலை போன்ற பெரு மதங்கொண்ட களிறு ஒன்று சினத்துடன் விரைந்து வரக் கண்டாள். தனியே இருந்த அவள் செய்வதின்னதென்று அறியாது திகைத்தாள்; கொய்த மலர்களை நிலத்தில் எறிந்துவிட்டு, ஓடத் தொடங்கினாள். மதங்கொண்டகளிறும், மங்கையைத் தொடர்ந்தது. அது கண்டு அச்சத்தால் அலறிய அணங்கின் கூக்குரல் அப்பக்கம் சென்று கொண்டிருந்த அநங்கனை நிகர்த்த ஆடவன் ஒருவன் காதிற் பட்டது. அவன் உடனே அங்கு விரைந்து வந்து, களிற்றினை வெருட்டிக் கன்னியின் கலக்கத்தைப் போக்கினான். தனக்கு நேரவிருந்த பேரிடரை நீக்கிய பெருந்தகையை அப்பெண் மகள் தனது நன்றியுணர்வு தோன்ற நோக்கினாள். அவ்வாடவனும், அழகின் உருவமாய் விளங்கிய அவளை நோக்கினான். அடுத்த நிமிடமே பெண்மைக் குணத்தின் பிறப்பிடமாகிய அம் மங்கை அவ்விடம் விட்டு அகன்றுவிட்டாள். ஆயின், அதற்கு முன் எத்தனையோ அழகிய ஆடவரை அவள் கண்டிருந்தும், எவர் மீதும் இச்சை

கொள்ளாத அவள் மனம் இந்த ஆடவன்பால் இச்சை கொண்டு நின்றது. எனவே, அது முதல் அவள் அவனையே தன் கணவனாக மதித்தாள்.

அதற்கு மறுநாள் கதிரவன் மேற்றிசையில் மறையும் மாலை நேரத்தில் அவள் அச்சோலையை அடைந்தாள். அதன் மருங்கே யமைந்த ஒரு சுனையின் அருகே அமர்ந்து, சென்ற நாளின் நிகழ்ச்சியைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தாள். களங்கமற்ற தன் மனத்தைக் களங்கப் படுத்தி, என்றும் அறியாத ஆடவன் ஒருவன் பால் ஈடுபடச் செய்த இறைவன், அவனைத் தன் கணவனாக்கி வையாமற் போகான் என்ற உறுதியோடு அவள் அங்கு அமர்ந்திருந்தாள்; அப்போது தன்னைக் காத்த பெருந்தகை, தானமர்ந்திருந்த இடத்தை நோக்கி வரக்கண்டாள்; உடனே, அவள் நாணமும், அச்சமும் மேலிட எழுந்து நின்றாள். அவளது பார்வை சுனை நீரில் ஆரல் மீன்களின் வரவை நோக்கி அயர்ந்திருந்த நாரையின் மீது சென்றது,

அப்போது அவளை யன்றி வேறொருத்தியை மனத்தாலும் நினைத்தல் கூடாது என்ற உறுதியுடன் அங்கு வந்த அவன், அவளது அச்சத்தைப் போக்கக் கருதி அவளருகிற் சென்று, தன் எண்ணத்தை எடுத்தியம்பினான்; அவளை விரைவில் தன் இல்லாள் ஆக்குவதாக உறுதி கூறினான். அவனது உரையைக் கேட்ட அப்பெண்ணும் மிக மகிழ்ந்து அவனை மணக்க இசைந்தாள்.

அவள் இசைவைப் பெற்ற அவ்வாடவன் தன் பெற்றோரை அவள் பெற்றோர்பால் மணம் பேசுவதற்கு மறுநாளே அனுப்புவதாகக் கூறிப் பிரிந்தான். நாட்கள் பல கழிந்தொழிந்தன. விரைவில் மணம் பேசித் தன்னை மணந்துகொள்வதாகச் சொல்லிச் சென்றவன், நாட்கள் பல கழிந்தும் வாராமையால், நங்கை நலிவுற்றாள்; அவ்வாடவன் தன்னை வஞ்சித்தானோ எனவும் ஐயமுற்றாள்; அக்கள்வன் தன்னைக் கைவிடுவானோ எனக் கலங்கினாள். அச்சம் அவள் உள்ளத்தை ஆட்கொண்டது. அன்று தன்னை மணப்பதாகக் கூறி, உறவாடிய அவன், இன்று மறுப்பானாயின், உண்மையை வெளிப்படுத்த உற்ற சான்றுகள் இல்லையே எனக் கலங்கினாள். தானும் அவனும் உரையாடியபோது தண் சுனையின் அருகில் ஆரல் மீனின் வருகையை எதிர் நோக்கியிருந்த நாரையைத் தவிர வேறொரு சான்றும் இல்லாமையை யெண்ணி உளம் நைந்தாள். தான் அதுவரை உள்ளத்தில் மறைத்து வைத்திருந்த உண்மையைத் தனது உயிரனைய தோழியிடம் உரைக்கத் தொடங்கி, "தோழி. தலைவன் என்னைக் கண்டு என்னோடு உரையாடிக் கொண்டிருந்தபோது, அக்கள்வன் ஒருவனைத் தவிர, மற்றெவரும் ஆங்கு இல்லை. அவன் இன்று தனது உறுதி மொழியை மறுத்துரைத்தால், யாம் யாது செய்ய இயலும்? அந்நேரத்தில் நாரை ஒன்று அங்கு இருந்ததாயினும், அது எங்களை நோக்காது, நீரில் வாழ்கின்ற ஆரல் மீனின் வருகையை நோக்கியிருந்தமை

யால்; அதுவும் உண்மையை யுணர்ந்த சான்ருகாதே," என உள்ளம் நொந்து கூறிஞள். இதனே,

"யாரும் இல்லே; தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ!
தினைத்தா ளன்ன சிறிபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகு முண்டுதான் மணந்த ஞான்றே,"

(அரும் பதவுரை: குருகு—நாரை, ஆரல்—ஒரு வகை மீன்)

என்னும் செய்யுள் உணர்த்துகின்றது. இச் செய்யுள் கபிலர் என்ற புலவர் பெருமாளுல் இயற்றப்பட்டது. பறம்பிற் கோமான் பாரியின் உயிர் நண்பராய் விளங்கிய இப்புலவர் பெருந் தகை, குறிஞ்சித்திணையைப் பற்றிய பாடல் களைப் பாடுவதில் சிறப்புற்றவர். இக்காரணம் பற்றியே இவர் 'குறிஞ்சிக் கபிலர்' எனக் குறிக் கப்படுகிருர். உவமைகளின் பொருத்தத்தை யுணர்ந்து நயம்படக் கூறுவதில் சிறப்புற்றவர் கபிலர். இங்கு நாரையின் கால்களுக்கு உவமை யாகத் தினையின் பசுமையான தாள்களைக் குறிப் பிட்டிருப்பது வியந்து பாராட்டத் தக்கதாகும்.

## 2. அறநெறி வழுவாத அணங்கு

செழிமை மிக்க சிற்றூர் ஒன்றில், உயர் குடிப் பிறந்தவளாகிய நங்கையொருத்தி, தன் கருத்துக்கிசைந்த ஆடவனைக் கணவனுகப் பெற்று, அவனுடன் இல்லற வாழ்வை இனிது நடத்தி, இன்புற்று வாழ்ந்திருந்தாள். ஒருநாள் அவள் கணவன் பொருளீட்டும் நோக்குடன்

அவளை விட்டுப் பிரிய எண்ணினான். பண்டைத் தமிழர், பெருஞ் செல்வத்தைப் பெற்ற வளமிக்க பெருங்குடியைச் சேர்ந்தவராயினும், முன்னோர் ஈட்டிய செல்வத்தின் பயனை நுகர்ந்து, மடியுடையராய் வாழும் மனப்பான்மை படைத்தவர் அல்லர். அவ்வழக்கப்படியே, கணவன் பொருளீட்டச் செல்ல வேண்டுமெனக் கூறியபோது, அவன் இல்லாள் அவனைத் தடை செய்யவில்லை. கணவனைப் பிரிந்து களிப்போடு வாழ்தல் இயலாது எனினும், அவனது ஊக்கத்தைத் தடை செய்ய அவளது உள்ளம் ஒருப்படவில்லை. அறவழியில் ஈட்டிய பொருளைக் கொண்டு, அறம் வளர்த்து, இன்பத்தை நுகர்ந்து வாழ்வதையே தமது பண்பாடாகக் கொண்டு வாழ்ந்து வந்த தமிழ்க்குடியிற் பிறந்தவளாதலின், தன் கணவனை மகிழ்ச்சியோடு வழியனுப்பினாள். காளையை நிகர்த்த அவன் நிறைந்த பொருளீட்டி விரைந்து வருவதாகக் கூறிச் சென்றனன்.

நாட்கள் சில கழிந்தன. தன்னைப் பிரிந்து சென்ற தலைவனைப் பற்றியே எப்போதும் எண்ணி ஏங்கியது அவளது உள்ளம். தன் கணவன் சென்ற வழியின் கொடுமைகளையெல்லாம் சிந்தித்தபோது, அப் பெண்மணியின் நெஞ்சம் 'எத்தகைய இடையூறு நேருமோ எம் அண்ணலுக்கு?' என ஏங்கியது. அவன் தன் மீது கொண்டிருந்த அன்பின் அளவை நினைத்து இன்புற்றபோது அவள் உள்ளத்தில் ஓர் அச்சமும் எழுந்தது. தன் மீது கொண்ட அன்பின் காரணமாக, ஒருகால் தன் தலைவன் பொருளீட்

டும் நினைவை முற்றிலும் மறந்து, இடை வழியி லேயே திரும்பிவிடுவானே என்று அஞ்சினுள். "பொருளீட்டும் நோக்கத்தோடு சென்றவன் மருண்ட உள்ளத்தோடு மனைக்குத் திரும்பி னுன்," என்று பிறர் இகழ்ந்துரைக்க இடந்தர லாகாது என எண்ணிஞள் அந்நங்கை. ஆதலின், உள்ளம் கலங்கினுள். அவளது வாட்டத்தை உணர்ந்த தோழி, அவளை நோக்கி, "தோழி, தம் முடைய கடமையை நிறைவேற்றும் பொருட்டுப் பொருளீட்டும் பெருநோக்குடன் உன்னைப்பிரிந்து சென்ற உன் கணவர் செல்லும் நெறி, களிற்றி னங்கள் சூழ்ந்திலங்கும் காட்டுப்பாதை. மதங் கொண்ட களிற்றினங்கள் தமது இனத்தின் பசியைப் போக்கும் பொருட்டு, அக்காட்டிற் காணப்படும் 'யா' என்னும் மரத்தின் பட்டை களைத் தம்முடைய கூர்மையான தந்தங்களால் குத்திப் பிளந்து. கொண்டு வந்து, அவை உண் ணும்படி கொடுக்கும். அக்காட்சியைக் காணும் உன் கணவர், களிற்றினங்கள் தமது கடமையை அறிந்து அதனை முடிக்கும் தன்மையை வியந்து போற்றுவார். 'ஐயறிவு படைத்த விலங்கினமே தம் கடமையில் தவருது இருக்கும்போது, ஆறறிவு பொருந்திய, பெறுதற்கரிய மக்கட் பிற வியைப் பெற்றுள்ள நாம் நமது கடமையை முடித்தல் வேண்டும்,' என நினைத்தவராய், அவர் இடை வழியைக் கடந்து சென்று பொருளீட்டும் செயலை முடித்த பின்னரே, இல்லத்திற்குத் திரும்புவார். அதைக் குறித்து அஞ்சற்க!" எனக் கூறினுள். இந் நிகழ்ச்சியை

"பொத்தில் காழ அத்த யாஅத்துப்
பொரியரை முழுமுத லுருவக் குத்தி,
மறங்கெழு தடக்கையின் வாங்கி, உயங்கு
சிறுகண் பெருநிரை யுறுபசி தீர்க்கும்
தருமருப்(பு) யானை கண்டனர் தோழி!
தங்கடன் இறீஇயர் எண்ணி யிடந்தொறும்
காமர் பொருட்பிணிப் போகிய
நாம்வெங் காதலர் சென்ற ஆறே."

*(அரும்பத உரை: பொத்து இல்காழ—புரையற்ற வயிரத்தையுடைய: அத்தம்—அரிய வழி; உயங்குநடை—வருந்துகின்ற நடை: பெரு நிரை—பெருங் கூட்டம்; இறீஇயர்—நிறைவேற்றும் பொருட்டு; காமர்—விரும்பத் தகுந்த: நாம் வெம் காதலர்—நாம் விரும்புகின்ற அன்பினையுடையவர்.)*

என்னும் செய்யுள் உணர்த்துகின்றது. இச் செய்யுளை இயற்றியவர் கடுகு பெருந்தேவனார் என்ற புலவர்.

## 3. அணிலாடு முன்றில்

பண்டைக் காலத்தில் ஆடவர் பற்பல காரணங்களை முன்னிட்டுத் தம்மனைவியரைப் பிரிந்து வேற்றிடங்களுக்குச் செல்வது வழக்கம். அப் பிரிவுகள் வருமாறு: உயர்ந்த நூல்களை ஓதி உணரும் பொருட்டுப் பிரிவது ஓதற் பிரிவு; நாடு காத்தற் பொருட்டுப் பிரியும் பிரிவு காத்தற் பிரிவு; மாற்றார் தம் நாட்டை முற்றுகையிட்டுப் போரிட முயன்றபோது. வேந்தனுக்கு உதவி செய்யும் பொருட்டு மனைவியைப் பிரிவது வேந்தர்க்கு

உற்றுழிப் பிரிவு. பொருளீட்டுங் காரணமாகப் பிரிந்து செல்வது பொருள் வயிற் பிரிவு.

அறநெறியைத் துணைக்கொண்டு, அன்பினால் குடிமக்களை அணைத்து, அமைதியாக நாட்டை ஆண்டு வந்தான் மன்னன் ஒருவன். அவனது நாடு பல் வளமும் நிறைந்து சிறப்புற விளங்கியது. ஒரு முறை மாற்றரசன் ஒருவன் படையோடு வந்து அந்நாட்டைக் கைப்பற்ற முயன்றான். அமைதியோடு விளங்கிய நாடு அல்லலுறத் தொடங்கியது. நாட்டு நலனில் நாட்டங் கொண்ட மாந்தர் வீர உணர்ச்சி மிக்கவராய், பகையை ஒடுக்கும் பணியில் பங்கு கொள்ளத் தாமாகவே முன்வந்தனர். மரக்குடியில் உதித்த வீரப் பெண்மணிகள் தம்முடைய கணவர்களையும் மக்களையும் போரில் பங்கு கொள்ளுமாறு தூண்டி ஊக்கினார்கள். "மார்பிலே விழுப்புண் பெற்று, மாற்றாரைப் புறங்கண்டு வெற்றியோடு மீள்க! இல்லையேல், போர்க்களத்தில் உயிர் கொடுத்துப் புகழுடம்பைப்பெறுக!" எனமகளிர் ஆடவரை வாழ்த்தி வழியனுப்பினர். அத்தகைய சூழ்நிலையில் அந்நாட்டைச் சேர்ந்த சிற்றூரில் வாழ்ந்த இள நங்கை யொருத்தி, தன் கணவனையும் போருக்கு அனுப்பத் துணிந்தாள். போர் 'என்று வரும் என்று வரும்' என எதிர் நோக்கியிருந்த காளையும் இல்லாளின் இசைவைப் பெற்றுப் போர்க்களம் நோக்கிச் சென்றான். மணந்த நாள் தொட்டுப் பிரிவென்பதனையே அறியாத மங்கை பிரிவின் கொடுமையை அப்போதுதான் உணரத் தொடங்கினாள். நாட்கள் செல்லச்

செல்ல, அவளது துயரமும் மேலோங்கிற்று. தன் கணவன் தன்னோடு இருந்தபோது, தன் உள்ளம் உற்ற மகிழ்ச்சியையும், அவனது பிரிவால் அது சோர்ந்து வருந்தும் நிலையையும் நினைத்துத் துன்புற்றாள். தன் கணவனோடு இன்புற்று வாழ்ந்த நாட்களையும், அவனைப் பிரிந்து தனிமையில் வாழும் நிலையையும் நினைத்தாள். அந்த நாட்களில் தனது இல்லம் ஆரவாரத்தைப் பொருந்தி அழகுடன் விளங்கிய தன்மையும், இந்நாளில் கதிரவனைக் காணாத கமலமும், வெண்மதியை யிழந்த விண்ணும் போன்று, பொலிவிழந்து தோன்றிய நிலையும் அவள் உள்ளத்தை உலைத்தன. தான் உறும் துயரைத் தன் உயிர்த்தோழியிடம் உரைக்கக் கருதிய அவள், அத்தோழியை நோக்கி, "உயிரனையாய், என் கணவர் என்னுடன் இருக்கும்போது, திருவிழா கொண்டாடும் ஊரில் உள்ள மக்கள் மகிழ்வதைப் போன்று, நானும் மகிழ்ச்சியுடன் வாழ்வேன். அவர் என்னைப் பிரிந்து சென்ற காலத்தில் வரண்ட பாலை நிலத்தினருகே அமைந்துள்ள அழகிய சிற்றூரில் வாழ்கின்ற மக்கள், அதை விட்டு அகன்றமையால், அரவமற்ற சூழ்நிலையில் அணில்கள் விளையாடுகின்ற முற்றத்தை யுடைய தனிமையான வீடு போன்று பொலிவிழந்து விளங்குகிறேன்," எனக் கூறினாள். மகிழ்ச்சியோடு வாழ்கின்ற தனது நிலையை விழாக் கொண்டாடும் ஊரில் வாழ்கின்ற மக்களது மன நிலைக்கும், தனிமையில் பொலிவற்று விளங்கும் நிலையை மக்கள் நீங்கியதனால் மாண்பற்றுப்

பொலிவிழந்து விளங்கும் சிறு வீட்டிற்கும் உவமித்துக் கூறியுள்ள தன்மை உணர்ந்து இன் புறற்பாலது. இச்செய்தியைக் கீழ் வரும் செய் யுளால் அறியலாம்:

"காதலர் உழையர் ஆகப் பெரிதுவந்து,
சாறுகொள் ஊரிற் புகல்வேன் மன்ற;
அத்தம் நண்ணிய அங்குடிச் சீறூர்
மக்கள் போகிய அணிலாடு முன்றிற்
புலப்பில் போலப் புல்லென்(று)
அலப்பென் றோழி! அவர் அகன்ற ஞான்றே"

அரும்பதவுரை :—உழையர்—பக்கத்தில் உள்ள வர்: சாறு–திருவிழா: அத்தம்—பாலை நிலம்; புலப்பில்–புலம்பும்+இல்–தனிமையான வீடு; புல் லென்று–பொலிவழிந்து; அலப்பென்—வருந்து வேன்.)

இச்செய்யுளைப் பாடியவர் அணிலாடு முன்றி லார் எனக் குறிக்கப்பட்டுள்ளார். இவ்வாசிரிய ரின் இயற்பெயர் இன்னதென்று அறிய முடிய வில்லை. மக்கள் நீங்கிய இல்லத்தின் முற்றத்தை அணிலாடு முன்றில் என இவர் குறிப்பிட்ட காரணத்தால், இவர் 'அணிலாடு முன்றிலார்' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றிருத்தல் வேண்டும் எனத் தெரிகின்றது. இங்ஙனம் சங்க நூல்களில் ஆசிரியர்களின் இயற்பெயரையறிய முடியாத நிலையில், அவர்கள் இயற்றிய செய்யுட் களில் காணப்படும் இனிய தொடர்களிலேயே அவர்கள் குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

# 4. கார்ப்பருவங் கண்டு கலங்கிய காரிகை

ஆண் மகன் ஒருவன் தனது அன்பிற்குரிய இல்லாளைப் பிரிந்து பொருளீட்டும் பொருட்டுச் சென்றான். அவன் கார்முகில்கள் வானத்திற் கூடிப் பெருமழை பெய்யத் தொடங்கும் கார் காலத்தில் மீண்டு வருவதாகக் கூறிச் சென்றனன். அவன் மனைவியும் இல்லற வாழ்விற்கு இன்றியமையாது வேண்டப்படுவது செல்வமாதலின், அதனை ஈட்டச் சென்ற தன் கணவனைத் தடை செய்ய இயலாமல் விடை கொடுத்தனுப்பினாள். நாட்கள் பல சென்றன. கார் காலமும் நெருங்கியது. நீல நிற வானம் கார் முகிற் கூட்டங்களைக்கொண்டு கறுத்து விளங்கியது. கார் காலத்தின் வருகையை யெதிர் நோக்கியிருந்த கொன்றை மரங்கள் பொன்னிற மலர்களைப் பூத்துப் பொலிவுடன் விளங்கின. அதுவரையில் தனது துயரத்தைத் தாங்கிக் கொண்டிருந்த நங்கை, கார்ப்பருவம் தொடங்கிய பின்னரும் தன் கணவன் வாராமைக்குக் காரணம் யாதோ எனக் கவன்றனள்; "இடை வழியில் ஏதேனும் இடையூறு நேர்ந்திருக்குமோ?" எனக் கலங்கினாள். அவளது கலக்கத்தைக் கண்ட அவள் தோழி, அவளை ஆற்றுவிக்கக் கருதி, "தோழி, கற்கள் நிறைந்து விளங்கும் பாலை நிலத்தின் கொடுமையான வழிகளை யெல்லாம் கடந்து சென்ற உனது கணவர், மீண்டு வருவதாகக் கூறிய கார்ப்பருவம் அன்று

இது. பருவந் தவறி மழை பெய்ய, அதனைக் கார்காலத்து மழையென்று கருதிக் கொன்றை மரங்கள், தம் அறியாமை காரணமாக, பூங் கொத்துக்களை வெளிப்படுத்தின. ஆதலின் கவலற்க. வாய்மை தவறாத உன் கணவர், தாம் குறிப்பிட்ட காலத்தில் தவறாது வந்து சேர்வர்," என ஆறுதல் கூறி அவளைத் தேற்றினாள். இந் நிகழ்ச்சியை,

"மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை
கல்பிறங்கு அத்தம் சென்றோர் கூறிய
பருவம் வாரா அளவை நெரிதரக்
கொம்புசேர் கொடியிணர் ஊழ்த்த
வம்ப மாரியைக் காரென மதித்தே."

(அரும்பொருள் :—மடவ-அறியாமையை உடையன; தடவுநிலை—பரந்த அடிப்பாகம்; இணர்—பூங் கொத்து; ஊழ்த்த—வெளிப்படுத்தின.)

என்னும் செய்யுள் அறிவிக்கின்றது. இதனை இயற்றியவர் **'கோவத்தன்'** என்னும் பெயரிய புலவர் ஆவர். இவரது பெயர் **'கோவதத்தன்'** எனவும் கூறப்படுகின்றது,

## 5. கொல்லிமலைப் பாவை

பண்டைக் காலத்தில் நமது செந்தமிழ் நாட்டில் சேர, சோழ, பாண்டியர் என்ற முடியுடை மூவேந்தரே யன்றி, மற்றும் குறுநில மன்னர்சிலரும் வாழ்ந்து வந்தனர். அக்குறுநில மன்னர்களுள் பலர் இரந்தோர்க்கு ஈந்து வாழும் இயல்பினராய் இருந்தனர். **பாரி, காரி, ஆய், அதிகன்,**

**நள்ளி, பேகன்,** ஓரி என்ற எழுவர் கொடையிற் சிறந்து விளங்கிய தன்மையால், அவர்கள் **கடையெழு வள்ளல்கள்** எனப் புகழப்பட்டார்கள். அவ்வெழுவருள் ஓரி யென்பவன் கொல்லியென்னும் மலைக்குத் தலைவன் ; பல இலக்குகளை ஒரே சமயத்தில் ஊடுருவித் துளைக்கும் வலிய வில்லையும், திண்ணிய தேரையும் உடையவன். அவ்வள்ளலின் வில் வன்மையைக் குறித்து வன்பரணர் என்ற புலவர் புகழ்ந்து பாடிய செய்யுள் புறநானூற்றில் காணப்படுகின்றது.

அவ்வள்ளலுக்கு உரித்தான கொல்லி மலைப் பகுதியில் மலைவளம் மிக்க சிற்றூர் ஒன்று உளது. அச்சிற்றூரில் வாழ்கின்ற மாந்தர் மலைச் சாரலிற் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு தமது வாழ்க்கையைச் செம்மையுற நடத்தும் இயல்பினர். அவர்கள் அருவிகள் பாயும் பரந்த நிலப்பரப்பில் மலை நெல்லை விதைத்து, அந்நிலத்தில் களையாகத் தோன்றிய காட்டு மல்லிகையையும், பசுமையான மரல் என்னும் தாவரத்தையும் களைந்தெறிந்து, செம்மையான முறையில் பயிரைப் பாதுகாத்துப் பலனைப்பெற்று மகிழும் இயல்பினர். அச்சிற்றூரில் வாழ்கின்ற சிறந்தோர், பசியோடு தமது இல்லம் நாடி வரும் விருந்தினர்க்கு உணவளிக்கும் வசதியைப் பெற்றிராவிடினும், அவர்களை ஏமாற்றமடையும்படி அனுப்பும் இயல்பினரல்லர். தம்மிடமுள்ள பெறுதற்கரிய விலை மிக்க யானைத் தந்தங்களை எளிய விலைக்கு விற்றேனும், தம்மை நாடி வந்தவரை ஓம்புகின்ற தண்ணளியுடையவர்.

சீர்மிக்க அச்சிற்றூரில் சிறப்புற்ற பெருங் குடியொன்றில் தோன்றிய எழில் மிக்க நங்கை யொருத்தி இருந்தனள். அவளை மணம் புரிந்து கொள்ள விரும்பினான் அயலூரைச் சேர்ந்த ஆடவன் ஒருவன். மணவினைக்குரிய செயல்கள் யாவும் முறையே நடந்துகொண்டிருந்தன. அவனுடைய நண்பன் ஒருமுறை அவனிடம், "நண்பா, உனது இல்வாழ்வில் பங்குகொள்ள விருக்கும் இனியவள் எவ்வூரைச் சேர்ந்தவள் ?" என வினவியபோது, அவனுக்கு விடையிறுக் கத் தொடங்கிய அண்ணல், "உயிரனைய தோழனே ! அருவி பாயும் பரந்த நிலப்பரப்பில் மலை நெல்லை விதைத்து, அந்நிலத்தில் முளைக்கும் காட்டு மல்லிகை, மரல் என்னும் களைகளைக் களைந்து வாழும் சிற்றூர் மக்கள், தங்கள் இல்லம் நாடி வந்தவர் பசித்திருப்பின் யானையின் தந் தத்தை விற்று, அவ்விலையால் தாம் அடையும் பொருளைக்கொண்டு அவர்க்கு உணவளிக்கும் இயல்பினர். அச்சிற்றூரைத் தன்பாற் கொண்ட வலிய வில்லையுடைய ஓரியினது கொல்லி மலையைச் சேர்ந்த பாவையே நான் விரும்பும் பெண்ணாவாள்" என இயம்பினான். இச்செய்தியை,

"அருவிப் பரப்பின் ஐவனம் வித்தி
பருவிலைக் குளவியொடு பசுமரல் கட்கும்
காந்தள் வேலிச் சிறுகுடி பசிப்பிற்
கடுங்கண் வேழத்துக் கோடுகொடுத் துண்ணும்
வல்வில் லோரி கொல்லிக் குடவரைப்
பாவை."

(அரும்பொருள் : ஐவனம்—மலைநெல்; குளவி—காட்டு மல்லிகை; கட்கும்—களைந்து எறியும்; கடுங்கண் வேழம் — அஞ்சாமையையுடைய யானை; கொடுத்து உண்ணும்—விற்று, அவ்விலையில் வரும் உணவை உண்ணுகின்ற; குடவரை—மேற்கு மலை.

என்னும் குறுந்தொகைச் செய்யுளின் அடிகள் குறிப்பிடுகின்றன.

இச்செய்யுள் **கபிலராற்** பாடப் பெற்றது. இப்புலவர் இயற்றிய மற்றொரு செய்யுளின் சிறப்பையும் முன்னரே அறிந்தோம். 'குறிஞ்சிக் கபிலர்' எனப் பாராட்டப்படும் இயல்புக்கு ஏற்றவாறே, ஆசிரியர் இச்செய்யுளிலும் மலை வளத்தைக் குறித்துப் பாடியுள்ளார்.

## 6. அறத்தொடு நிற்றல்

ஒரு சிறு குன்றையடுத்துள்ள சிற்றூருக்குத் தலைவன், ஒரு நாள் கானகத்திற்கு வேட்டையாடச் சென்றான். அங்கு ஓர் அழகிய மானைக்கண்டு துரத்திச் சென்றவன் எழில் மிக்க பொழில் ஒன்றினுள் நுழைந்தான். அப்பொழிலின் ஒரு புறத்திலிருந்து வந்த ஒரு பெண்ணின் அரற்றலைக்கேட்டு விரைந்து சென்ற அவன், அங்கிருந்த சுனை யொன்றின் நீர்ச்சுழலில் சிக்கி, மூழ்கிப்போம் நிலையில் தவித்துக் கொண்டிருந்த மங்கையையும், அவளைக் காப்பாற்றும் பொருட்டு உதவியை நாடிக் கதறுகின்ற மற்றொருத்தியையும் கண்டான். உடனே அவன் அச்சுனையிலிறங்கி அந்நங்கையைக் காத்தான். நங்கையர் இருவரும் அண்ணலுக்கு நன்றி செலுத்தினர்.

அதன் பின்னர் அவ்வாடவன் அவர்களை அச்சோலையில் அடிக்கடி கண்டான்; அவர்களோடு உரையாடினன்; தன்னால் சுனையிலிருந்து காப்பாற்றப்பட்டவளையே தான் மணக்கவேண்டும் என விரும்பினன்; அம்மங்கையும் தன்னுயிரைக் காத்த அத்தலைவனையே மணக்க நிச்சயித்திருந்தாள். நாட்கள் பல சென்றன. இதற்கிடையில் பெண்ணின் மனக் கருத்தையறியாத அவளுடைய பெற்றோர் மற்றோரிடத்தில் தம் பெண்ணைக் கொடுக்க முடிவு செய்தனர். இச்செய்தியை யறிந்ததும், அம்மங்கை மிகுந்த வேதனையுற்றாள்; தன் கற்புக்கு இழுக்கு நேருமே எனக் கலங்கினள். ஆயினும் நிகழ்ந்ததைப் பெற்றோர்க்கு எடுத்துரைத்தற்கு நாணியவளாய் உள்ளம் வருந்தினள்; உணவையும், உறக்கத்தையும் ஒழித்தாள். அவளது உடல் மெலிந்தது.

இன் முகமும், புன்னகையும் உடைய தம் பெண் கவலையின் உறுவினளாய், பொலிவிழந்த முகத்தினளாய், எழிலிழந்த மேனியளாய் விளங்கியதைக் கண்டு, அவளுடைய பெற்றோர் கவலையுற்றனர். மலைச்சாரலில் எங்கேனும் பயந்திருப்பாளோ மங்கையென எண்ணினர். குறிபார்த்து உற்றதை உரைக்கும் குறத்தியைத் தருவித்தனர். முறத்தில் நெல்லைப் பரப்பித் தெய்வங்களைப் பரவி, பின்னர் அந்நெல்லை யெண்ணி, அதனாற் சில குறிப்புக்களை உணர்ந்து உற்றதை யுரைக்கும் அக்குறத்தியை **'அகவல் மகள்'** என

வும் கூறுவர். தனது நோயின் காரணத்தை அறியப் பெற்றோர்கள் அகவல் மகளை அழைத்ததை உணர்ந்த அப்பெண்மணி, "இக் குறமகள் உண்மை நிகழ்ச்சிக்கு மாறாக ஏதேனும் கூறினால் யாது செய்வது?" என எண்ணியவளாய், தன் தோழியை நோக்கி, "நீ எவ்வாறாயினும் எனது நோயின் காரணத்தை என் பெற்றோர்க்கு அறிவித்து விடுக," என வேண்டினாள்.

குறத்தி, தான் குறி சொல்லும் முறைப்படி முதலில் மலை வளத்தைப் புகழ்ந்து பாடத் தொடங்கினாள். பெண்ணின் பெற்றோரும், மற்றையோரும் சூழ இருந்து அவள் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்தனர். குறத்தி, தென்றல் உலவுகின்ற தென்பொதிகைத் தண்டமிழ்நாட்டு மலைகள் யாவற்றையும் புகழ்ந்து பாடியபோது, தம் தலைவனது மலையையும் புகழ்ந்து பாடினாள். அவ்வமயம் அங்கு இருந்து, நிகழ்ந்தவற்றைக் கவனித்துக்கொண்டிருந்த தோழி, தனது கருத்தை அறிவித்தற்கு அதுவே ஏற்ற நேரமாகுமென எண்ணியவளாய், அக்குறத்தியை நோக்கி, "தெய்வங்களை அழைத்துப் பாடுகின்ற பெண் மகளே, சங்கு மணியால் அமைந்த மாலையைப் போன்று வெண்மையான கூந்தலையுடையமுதியவளே, என் தோழி விரும்பும் நல்லோரது மலையைக் குறித்துப் பாடிய பாட்டை மீண்டும் ஒருமுறை பாடுக," என்று கூறினாள். இவள் இவ்வாறு கூறிய போது அப் பெண்ணின் தாய், தோழியை நோக்கி, "நீ இவ்வாறு கூறியதன் கருத்து யாது?" என வினவினாள். உடனே

தோழி நிகழ்ந்தவற்றை யெல்லாம் உணர்த்தித் தன் தோழியின் நோய்க்குரிய காரணத்தையும் புலப்படுத்தினாள். அதன் பின்னர் அப்பெண்ணின் பெற்றோர் மிகமகிழ்ந்து, அவள் விரும்பிய ஆடவனுக்கே அவளை மண முடித்து வைத்தனர். இவ்வாறு உண்மை நிகழ்ச்சியைக் குறிப்பால் உணர்த்தி, அற நிலைக்கு மாறு படாது ஒழுகும் தன்மை, 'அறத்தொடு நிற்றல்' எனப்படும். இந்நிகழ்ச்சியை,

> "அகவல் மகளே, அகவல் மகளே,
> மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்
> அகவல் மகளே, பாடுக பாட்டே!
> இன்னும் பாடுக பாட்டே, அவர்
> நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே!"

(அரும்பொருள்: அகவல் மகள்—தெய்வங்களை அழைத்துப்பாடிக் குறி சொல்லும் பெண் மகள்: மனவு-சங்கு மணி; கோப்பு—கோவை, மாலை.)

என்னும் செய்யுளின் வாயிலாக நாம் அறிகின்றோம்.

இச்செய்யுள் தமிழ்மூதாட்டி ஔவையாராற் பாடப் பெற்றது. இப் பெண்பாற் புலவர் பாடிய பல செய்யுட்கள் இந்நூலில் உள்ளன. இவையேயன்றி, இவர் பாடிய பல செய்யுட்கள் புறநானூற்றிலும், பிற சங்க நூல்களிலும் காணப்படுகின்றன. வயதில் முதிர்ந்தவளாகிய குறத்தியின் நரைத்த கூந்தலுக்கு அவள் அணிந்திருந்த சங்கு மணியையே உவமையாகக் கூறிய இவரது அருந்திறன் வியக்கற்பாலதாகும்.

# 7. வருந்திய உள்ளம்

மறக்குடியில் உதித்த மைந்தனொருவன் ஒரு மங்கையை மணக்க விரும்பினான்; அப்பெண்ணைப் பலமுறை கண்டு உரையாடினான்; விரைவில் மணந்துகொள்வதாக உறுதிமொழியும் புகன்றான். ஆயினும் நாட்கள் பல கழிந்தும், மணத்திற்கு முயற்சி செய்யாது இருந்த அவனது நிலை, அம்மங்கை நல்லாளுக்கு ஐயத்தையும், அச்சத்தையும், கவலையையும் விளைவித்தன. மயிர் நீப்பின் வாழாக் கவரிமானைப் போன்ற மானத்திற் சிறந்த மாண்புமிக்க குடியிற் பிறந்த அப்பெண்மணி, தனது செய்கையால் தனது குடிப்பெருமைக்கு இழுக்கு நேர்ந்தால் என்ன செய்வது எனக் கலங்கினாள். தன்னை விரும்பிய ஆண்மகனிடம் மணத்திற்கு முன்னர் உரையாட முடியாது என்பதனை உறுதியாக அவனுக்கு எடுத்துரைக்க வேண்டும் என எண்ணினாள்,

செங்கதிர் தன்னுடைய வெம்மைக் கதிர்களால் உலகை வருத்திய பகற்காலம் மறைந்து, இருள் சூழத் தொடங்கியது. சோலையிற் பொருந்திய முல்லைக் கொடிகள் யாவும், புன்னகை புரியும் மெல்லியலார் போல, வெண்ணிற மலர்களைத் தோற்றுவித்து விளங்கின. அவ்வாண்டகை தன் உள்ளம் விரும்பிய பெண் மகளைக் காணச் சோலையை நாடி விரைந்து வந்தனன். அவனது வரவைக் கண்ட அணங்கு தனது தோழியின் வாயிலாகத் தனது எண்

ணத்தை அவனுக்கு அறிவிக்கச் செய்தாள். அங்கிலையில் தோழி அவ்வாடவனை நோக்கி, "மானத்திற் சிறந்த மறக்குடிப் பிறந்தோய்! நல்லோர் தமது உறுதி மொழியினின்று எந்நாளும் மாறுபடார். நற்குடிப் பிறந்த நல்லோனாகிய நீயும் என் தோழியை விரைவில் மணஞ்செய்து கொள்ளுதற்குரிய முயற்சியை மேற்கொள்வாய் என எண்ணுகிறேன். என் தோழி மணத்திற்கு முன்னர் உன்னைக் காண மறுக்கின்றாள். விரைவில் மணமுடித்து அவளைப் பெறுக!" எனக் கூறினாள். அதைக் கேட்டதும் அம்மைந்தனின் உள்ளம் வாட்டமுற்றது. காலம் தாழ்ந்தமை குறித்துக் கலங்கினான். மணத்திற்குப் பின்னரே மங்கையைக் காணல் வேண்டும் என எண்ணியவனாய் அவன் தன் இல்லம் நோக்கிச் செல்ல நினைத்தபோது, அவனது உள்ளம், தனது இல்வாழ்வுக்கு உரிய இனியாளை ஒருமுறையேனும் கண்டு உரையாட வேண்டும் என்னும் எண்ணம் கிளர்ந்தெழச் செய்தது. அங்கிலையில் அவ்வாண்டகை அழிந்த தன் உள்ளத்தை நோக்கி, "நெஞ்சே, நீ நற்பயன் அளிக்கும் நல்லுரைகளை விடுத்துப் பயனற்ற எண்ணத்தைப் பெற்றிருக்கின்றாய். சுடப்படாத பசு மண்ணால் செய்யப்பட்ட மட்பாண்டத்தில் மழைநீர் தங்கியதால், அப்பாண்டம் சிதைவுறுவதைப் போன்று, உன்னால் தாங்க இயலாத ஆவலைக் கொண்டு வருந்துகின்றாய். உயர்ந்த மரக் கொம்பில் வாழ்கின்ற மந்தியானது தன் குட்டியைத் தழுவி இன்புறுதல் போல, உன்

னுடைய கருத்தை ஏற்றுக்கொண்டு மகிழ்பவர் ஒருவரும் இங்கு இலர்,'' என்று கூறி ஆறுத லுற்றவனுய்த் தன்னில்லம் நாடிச் சென்ருன். இந்நிகழ்ச்சி,

''நல்லுரை இகழ்ந்து புல்லுரை தாஅயப்
பெயல்நீர்க் கேற்ற பசுங்கலம் போல
உள்ளம் தாங்கா வெள்ளம்நீந்தி
அரிதுஅவா வுற்றனை நெஞ்சமே! நன்றும்
பெரிதா லம்ம/நின் பூசல் உயர்கோட்டு
மகவுடை மந்தி போல
அகனுறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே.''

(அரும்பொருள் : புல்லுரை—பயனற்ற சொல்; பெயல் நீர்—மழைநீர்; பசுங்கலம்—சுடப்படாத மட்பாணடம்; பூசல்—போராட்டம்; மகவுடை மந்தி—குட்டியையுடைய பெண் குரங்கு; அகன் உற —உள்ளம் பொருந்த)

என்னும் செய்யுளின் வாயிலாக அறியக் கிடக்கின்றது.

இச் செய்யுளும் நம் தமிழ் மூதாட்டி ஔவை யாரால் பாடப்பெற்றதே யாகும். தன்னுல் தாங் குவதற்கு இயலாத ஆசையை மேற்கொண்டு, அதனுல் வருந்திய உள்ளத்திற்கு உவமையாகப் பசுமையான மட்பாண்டத்தில் தேங்கிய மழை நீர் கூறப்பட்டது. சுடப்படாத மட்கலம் உறுதி யற்றிருக்குமாதலின், அதில் நீர் தங்கும் போது அப்பாண்டம் விரிதல் உற்று உடைகின்றது. அது போன்று உறுதியற்ற உள்ளம் பேரவாக் கொள்ளும்போது, பேதமையுற்று வருந்துகின்

றது என்ற கருத்தை யுட்கொண்டு ஔவையார் அழிந்த உள்ளத்திற்குச் சிதைந்த மட்பாண்டத்தை உவமை யாக்கினர். மரக்கிளையில் வாழ்கின்ற மந்தியானது, தனது குட்டியால் தழுவப் பெற்று மகிழ்ச்சியுறுவதைப் போன்று, பெறுத்தற்கரிய ஆசை வெள்ளத்தில் ஊசலாடுகின்ற உறுதியற்ற உள்ளம், தன் எண்ணத்தை யேற்றுக்கொள்ளும் தன்மையரை விரும்பி நிற்கின்றது என்னும் கருத்தால் மகவுடை மந்தியெனக் குறிப்பிட்டார். இவ்வுவமையின் நுட்பம் சிந்தித்து மகிழ்தற்குரியது.

## 8. பாணன்பெற்ற பரிசில்

செந்தமிழ் நாட்டின் ஒருபால் அமைந்த சிறு நாடொன்றைச் சிறப்புற ஆண்டுவந்தான் மன்னன் ஒருவன். ஆண்டில் இளையனேயாயினும் அறிவில் முதிர்ச்சி பெற்ற அவ்வள்ளல் செந்நெறி வழுவாது செம்மையாக ஆண்டுவந்த நாளில், அவனது நாட்டைக் கவரவேண்டுமென்னும் எண்ணத்தால் பகை மன்னன் ஒருவன் படையோடு சூழ்ந்தான். மாற்றானின் படை வரவை யுணர்ந்த மன்னன் வெகுண்டான். நால்வகைப் படைகளும் திரண்டன. வீரர் ஆர்ப்பரித்துப் போர் முரசு கொட்டிப் போர்க்களம் நோக்கிப் புறப்பட்டனர். மானமே பெரிதாகக் கொண்ட மன்னனும், இளம்பருவத்தினளாய இல்லாளிடம் விடைபெற்றுக் கடலனைய பெருஞ்சேனை பின் தொடரக் களம் நோக்கிச் சென்றான்,

காலச் சகடம் கடுகிச் சுழன்றது. நாட்கள் பல விரைந்தோடின. இரு திறத்துப் படைகளும் இடைவிடாமற் போர் புரிந்தன. போர் என்று முடியும் என ஏங்கிய உள்ளத்தினளாய்த் தன் கணவன் வரவை எதிர் நோக்கி வாட்ட முற்றிருந்தனள் மன்னன் மனையாள். மதில் சூழ்ந்த பெரு மனைக்குள் வாழ்ந்த அம் மங்கை, போர்க்களத்து நிகழ்ச்சிகளை ஒற்றர்கள் வாயிலாக உடனுக்குடன் உணர்ந்து வந்தனள். மன்னன் இல்லாத மனை அம்மங்கைக்குக் கதிரவனை இழந்த வானம்போன்று பொலிவற்று விளங்கியது. வானை யெதிர் நோக்கி வாடிய பசும் பயிர்போல, வாகை மாலை சூடி மக்கள் மனமகிழ மன்னன் வரும் திசையை நோக்கி வாட்டமுற்றது அவளது உள்ளம். இன்னிசைபாடி இன்புறுத்தும் தொழிலில் வல்லவனாகிய பாணனையழைத்து, மன்னன் தங்கியிருக்கும் பாசறைக்குச் சென்று செய்தியை அறிந்து வருமாறு ஏவினாள்.

பாணனும் விரைந்து சென்று பாசறையை அடைந்து மன்னனிடம் அவன்மனைவியின் வாட்டத்தை எடுத்துரைத்தான். மன்னன் போரை முடித்துக்கொண்டு விரைவில் வருவதாகத் தன் இல்லாளிடம் கூறும்படி பாணனிடம் உரைத்து, அவனை அரண்மனைக்கு அனுப்பினான். அன்றைய நாளில் நடந்த போரில் மன்னன் தன் படையோடு போர்க்களம் புகுந்து, பெரும்போர் புரிந்து, மாற்றார் படையைச் சிதைத்தான். கதிரவனைக் கண்டதும் பனி மறைவதைப் போன்று,

வீர .உணர்ச்சியோடு போர்புரிந்த மன்னன் படைகளுக்கு முன்னால் மாற்றார் படைகள் எதிர்த்துநிற்க இயலாது தோற்றோடின .மன்னனிடம் விடை பெற்று இடைவழியில் வந்து கொண்டிருந்த பாணன் தன் மன்னன் வெற்றி பெற்றதற்கு அறிகுறியாக முழக்கப்பட்ட வெற்றி முரசின் பெரு முழக்கத்தைக் கேட்டான். அவன் உள்ளம் உவகையால் நிறைந்தது. மன்னன் மனையாளுக்கு மகிழ்ச்சி மிக்க வெற்றிச் செய்தியை அறிவிக்க வேண்டும் என்னும் பேராவலோடு விரைந்து சென்றான். அரண்மனையை யடைந்த பாணன் அரசியை நோக்கி. "கோப்பெருந் தேவியே, நும் புகழ் இக்குவலய மெங்கும் பரவுவதாக! உம் கணவர்–எம் தலைவர் —வளமிக்க இந்நாட்டைப் பலர் புகழ அரசோச்சும் மனனர் மாற்றார் படையைக் கூற்றுக்கு விருந்தாக்கி, வெற்றிமாலை சூடி விரைந்து வருகின்றார். உமது கவலையை ஒழிப்பீர்," என உவகையோடு கூறினான். பாணனின் சொற்களைச் செவியுற்ற பாவை பெருமகிழ்ச்சியுற்றாள், தனக்கு ஆறுதல் உண்டாக வேண்டுமென்ற எண்ணத்தால் பாணன் பொய்யுரை புகன்றானோ எனவும் ஐயுற்றாள். பின்னர் அவனை நோக்கி, "என் கணவர் வெற்றியோடு மீண்டு வருவதை நீயே கண்டாயோ? அல்லது கண்டவர் கூறக் கேட்டாயோ? நான் உண்மையை உணர்ந்து கொள்ள விரும்புகிறேன். ஆதலால் உண்மையைத் தெளிவாக உரைத்திடுக. நீ கூறும் செய்தி உண்மையாயின் பொன்மிகுந்த பாடலிபுத்திர

MADURA TAMIL

நகரைப் பரிசிலாகப் பெறுவாய்,' எனக் கூறினள்.

பாடலிபுத்திரம் என்ற நகரமானது மகத நாட்டின் கோநகராய் விளங்கிய மாண்பினை யுடையது. அந்நகரம் சந்திரகுப்த மௌரியர், அசோகர் போன்ற பேரரசர்கள் வீற்றிருந்து செங்கோலோச்சிய சிறப்பினை யுடையது. அதுவே இந்நாளில் 'பாட்னு' என வழங்கப்படு கின்றது; அந்நகரின் அருஞ் சிறப்புக்களைத் தன் கணவன் கூறக் கேட்டுணர்ந்தவளாதலின், மன்னன் மனையாள் தனது மகிழ்ச்சிப் பெருக்கினால் 'பரிசிலாகப் பெறுக,' எனக்கூறினாள். இச் செய்தியை,

"நீகண் டனையோ? கண்டார்க்கேட் டனையோ?
ஒன்று தெளிய நசையின மொழிமோ!
வெண்கோட்(டு) யானை சோனை படியும்
பொன்மலி பாடலி பெறீஇயர்!
யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே."

(அரும் பொருள்:—நசையினம் — விரும்பினோம்; மொழிமோ—கூறுக: வெண்கோட்டு யானை — வெண்மையான தந்தங்களையுடைய யானை; சோனை—இது கங்கையின் உப நதிகளுள் ஒன்று; பொன்மலி—பொன் நிறைந்து விளங்கும்.)

என்னும் குறுந்தொகைச் செய்யுள் விளக்கு கின்றது. இச் செய்யுள் படுமரத்துமோசிகீரனார் என்ற புலவராற் பாடப்பெற்றது.

# 9. காளையின் கலக்கம்

மாநிலத்தில் மக்களாய்ப் பிறந்தவர் இம்மையில் அடைவதற்குரிய உறுதிப் பொருள்கள் அறம், பொருள், இன்பம் எனும் மூன்றுமே யாகும். அவற்றுள் இடைப்பட்டதாக விளங்குகின்ற பொருள் இல்லாவிடில், ஏனைய இரண்டும் செம்மையுற்று இயங்கா. அறச் செயல்களைச் செய்வதற்கும், இன்பத்தை நுகர்வதற்கும் இன்றியமையாது வேண்டப் படுவது பொருளேயாகும். பொருளற்றவர் இவ்வுலக வாழ்வில் எத்தகைய நன்மையையும் எய்த முடியாது என்ற காரணத்தால்தான், வள்ளுவப் பெருந்தகையாரும் ''பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை,'' எனப் புகன்றார். ''நடுவணது எய்த இரு தலையும் எய்தும்,'' என நாலடி நவின்றதும் இக் கருத்தை யுட்கொண்டேயாகும். எனவே, நம் முன்னோர் எத்தகைய இடையூறுகள் நேரினும், அவற்றைப் பொருட்படுத்தாது, பிறப்பிடம் விட்டுப் பெயர்ந்து சென்றேனும், பொருளீட்டவேண்டும் என்னும் கருத்தால், 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு,' எனக் கூறினர்.

இத்தகைய சிறப்பினையுடைய பெருஞ் செல்வத்தைத் தேட எண்ணியது இளைஞன் ஒருவனது உள்ளம். செல்வத்தின் பெருமையையும், அது இன்மையால் மக்கள் அடையும் சிறுமையையும் உணர்ந்த அவ்விளைஞன், இல்லற வாழ்விற்குரிய கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றச் செல்வம் இன்றியமையாதது எனத் தெளிந்

தான். அவன் பொருளீட்டும் நோக்கத்தோடு வெளிநாடு செல்ல விரும்பினுன். இளமையும் எழிலும் நிரம்பிய தன் இல்லாளிடம் தனது எண்ணத்தை எடுத்தியம்பினுன். தன் கணவனுடைய சொற்களைச் செவியுற்றதும், அம்மங்கையின் மலர் விழிகள் மழை போல நீரைச் சொரிந்தன. அப் பெண்மணி செல்வத்தின் சிறப்பை நன்கு உணர்ந்தவளாயினும், உயிரனைய கணவனைப் பிரிந்து வாழ்வது எங்ஙனம் என ஏங்கினுள். புன்னகை பொலிந்த அவளது மதிமுகம், காரிருள் சூழ்ந்த வானம் போன்று கறுத்தது. தன் இல்லாளின் வருத்தத்தைக் கண்ட ஆடவன், அவளது துயரத்தை நீக்கக் கருதிச் சின்னுட்களுக்குப் பின்னர், பொருளீட்டச் செல்வதெனத் துணிந்தான். "அன்பே, உன்னைப் பிரிந்து செல்ல என் உள்ளம் ஒருப்படுமோ? உன் அன்பின் நிலையை உணர்ந்து இன்புறவே அவ்வாறு கூறினேன். கவலையை ஒழித்திடுக," எனக் கூறிக் கலக்கமுற்று நின்ற காரிகையைத் தேற்றிக் களிப்பூட்டினுன்.

நாட்கள் சில கழிந்தன. அவனது உள்ளம் மீண்டும் பொருள்வயிற் பிரிவை விழைந்தது. அந்நிலையில் அவன் தன் நெஞ்சை நோக்கி, "நெஞ்சே, இல்லத்தை நாடி வந்து இரந்தோர்க்குப் பொருள் ஈதலும், இன்பத்தை நுகர்தலும் பொருளற்றவர்க்கு இல்லை என்பது கருதி, அப்பொருளை ஈட்டுவதற்குரிய செயல்களையெல்லாம் நீ எண்ணுகின்ருய். நீ செய்ய நினைக்கும் அச்செயலுக்கு உடனிருந்து துணைபுரிய அழகிய

நிறத்தினையுடைய என் இல்லாளையும் அழைத்து வருவாயோ? செல்லுதற்கரிய கொடுமை பொருந்திய பாலை நிலத்தின் வழியாக, சொல்லு தற்கரிய துன்பங்களை மேற்கொண்டு என் துணைவி வருவதற்கு நீ உடன்பட மாட்டாய் அன்றோ? எனவே யான் மட்டும் உன்னோடு தனித்து வரவேண்டும். என் இல்லாளைப் பிரிந்து வருவதற்கு யான் இசையேன்," எனக் கூறித் தன் உள்ளம் விரும்பிய செயலை மேற் கொள்ளாது ஒழித்தான். இதனை,

"ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்லெனச்
செய்வினை கைம்மிக எண்ணுதி: அவ்வினைக்கு
அம்மா அறிவையும் வருமோ?
எம்மை யுய்த்தியோ உரைத்திசின் நெஞ்சே!"

(அரும் பொருள் :—துய்த்தல் — நுகர்தல்; இல் லோர்—பொருளற்ற வறியோர்; அ+மா+—அம்மா; அரிவை—அழகிய நிறத்தினையுடைய பெண்; உரைத்திசின்—சொல்லுவாயாக.)

எனும் செய்யுள் உணர்த்துகின்றது.

இக்குறுந்தொகைச் செய்யுள் உகாய்க்குடி கிழார் என்ற புலவரால் இயற்றப்பட்டது.

## 10. காக்கையின் உதவிக்குக் கைம்மாறு

பொருளீட்டும் நோக்கத்தோடு தன் மனைவி யைப் பிரிந்து சென்ற ஆடவன் ஒருவன் குறிப் பிட்ட காலத்தில், தான் விரும்பிய பொருளை ஈட்டிக் கொண்டு இல்லம் திரும்பினான். அவனது

வருகையால் இல்லத்தின் கண் இன்பம் நிறைந்தது. அவன் இல்லாதபோது பொலிவற்று விளங்கிய இல்லம் எழிலுற்று இலங்கியது. அவ்வாண்மகன், தான் இல்லாத போது தன் இல்லாளைத் தேற்றி ஆறுதல் கூறித் தான் பிரிந்ததனால் உண்டாகிய துன்பம் தெரியாதவாறு பாதுகாத்த அவளுடைய தோழிக்கு நன்றி செலுத்த விரும்பினான். ஆதலின் அவளை நோக்கி, "நீ உன் தோழியின் துயரத்தைப் போக்கி அவளை நன்கு பாதுகாத்தாய். நீ செய்த இவ்வுதவிக்குக் கைம்மாறாக எப்பொருளைக் கொடுத்தாலும் ஈடாகாது," என்று புகழ்ந்துரைத்தான்.

அப்போது அத்தோழி, "எம் அன்பிற்குறிய அண்ணலே, நும் இல்லாளை ஆற்றுவித்தற் பொருட்டு யான் பெரு முயற்சி யாதும் செய்திலேன். உனது புகழ் உரைக்கு உரியவள் நானல்லள்; காக்கையே யாகும். உம் மனையாள் உமது நினைவால் வருந்திக் கொண்டிருந்த போதெல்லாம், இல்லத்தின் முற்றத்தில் இறைந்து கிடந்த சோற்றுப் பருக்கைகளை உண்ணுதற் பொருட்டு வந்த காக்கையானது கரைய, நான் அதனையே நன்னிமித்தமாகக் கொண்டு, உம் மனைவியிடம், "அன்பிற்குறியவளே, விருந்தினர் நமது இல்லத்திற்கு வருவதற்கு அறிகுறியாகக் காக்கை கரைகின்றது. ஆதலின் உன் கணவர் விரைவில் வருவார். வருந்தற்க!" எனக் கூறி அவளைத் தேற்றினேன். ஆதலின், வலிமை மிக்க தேரைக் கொண்ட நள்ளி என்னும் வள்ளலுக்குரிய காட்டில் வாழ்கின்ற இடையர்கள்

வளர்க்கும் பசுக்கள் கொடுத்த நெய்யோடு, தொண்டி என்னும் ஊரிலுள்ள வயல்களில் விளைந்த வெண்மையான நெல்லின் விழுமிய அரிசியைக்கொண்டு ஆக்கப்பட்ட சோற்றைக் கலந்து, ஏழு பாத்திரங்களில் ஏந்திக் கொடுத்தாலும், உம் இல்லாளின் துயரம் நீங்கும்படி, உமது வருகையை அறிவித்த அக்காக்கைக்குச் சிறந்த கைம்மாருகாது,'' என்று கூறினாள்.

இச் செய்தியைப் பின்வரும் குறுந்தொகைச் செய்யுள் வாயிலாக அறியலாம் :

**''திண்டேர் நள்ளி கானத்து அண்டர்**
**பல்ஆ பயந்த நெய்யில், தொண்டி**
**முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு**
**எழுகலத்து ஏந்தினும், சிறிது என்தோழி**
**பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு**
**விருந்துவரக் கரைந்த காக்கையது பலிக்கே''**

(அரும் பொருள் :—அண்டர்—இடையர்; ஆ—பசு; பயந்த—உண்டாக்கிய; வெஞ்சோறு—சுடு சோறு, அதாவது சூடு குறையாது பக்குவமாயுள்ளசோறு; நெகிழ்த்த—வாடும்படி செய்த; செல்லல்—துன்பம்; கரைதல்—காக்கையின் ஒலி; பலி—உணவு.)

நள்ளி யென்பவன் கடைச் சங்க காலத்தில் வாழ்ந்த ஏழு வள்ளல்களுள் ஒருவனுவான். தோட்டியென்னும் மலைக்கும் அதனைச் சார்ந்த காட்டுப் பகுதிக்கும் தலைவனுய் விளங்கினுன். இரந்தோர்க்கு இல்லையென்னுது அளித்த, அவ் வள்ளலின் சிறப்பைக் குறித்து வன்பரணரும்,

பெருந்தலைச் சாத்தனாரும் பாடிய செய்யுட்கள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன. தொண்டி யென்பது பண்டை நாளில் சேரநாட்டின் சிறந்த துறைமுகப்பட்டினமாக விளங்கியது.

இச்செய்யுள் காக்கைபாடினியார் நற்செள்ளையார் என்ற பெண்பாற் புலவரால் இயற்றப்பட்டது. இவரது இயற் பெயர் நச்செள்ளையார் என்ப தாகும். காக்கையைச் சிறப்பித்துப் பாடிய காரணத்தால் இவர் 'காக்கைபாடினியார்' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றார். மதி நலமும், மொழி நலமும் வாய்ந்த இவ்வம்மையார் ஆடு கோட்பாட்டுச்சேரலாதன் என்னும்அரசன்மீது பதிற்றுப்பத்தில் ஆறும் பத்தைப்பாடி, நிறைந்த பரிசில்களைப் பெற்ற பெருஞ் சிறப்பினை உடைய வராவர்.

---

# 3. பதினெண் கீழ்க்கணக்கு

## கிழ்க்கணக்கு நூல்களின் கருத் தொற்றுமை

செந்தமிழ் மொழியிற் சிறப்புற விளங்கும் பண்டைய நூல்கள் மேற்கணக்கு, கீழ்க்கணக்கு என்னும் பகுப்புக்களுள் அடங்கும் என்பது முன்னரே கூறப்பட்டது. அவற்றுள் மேற் கணக்கு என்பது நான்கிற்கு மேற்பட்ட அடிகளை யுடைய பாக்களினுல் அமைந்து அறம், பொருள், இன்பம் என்னும் பொருள்களை விளக்குவது. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை யென்பவை மேற்கணக்கு நூல்களாகும். கீழ்க்கணக்கு நூல் கள் என்பன நான்கிற்கு மேற்படாத அடிகளைக் கொண்ட செய்யுட்களால் அமைந்து, மேற் கணக்கு நூல்களைப் போன்று அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை விரிவாகவும், வீட்டைப் பற்றிச் சுருக்கமாகவும் உரைக்கும்நூல்களாகும். கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டாகும். அவை நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்ஞு நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந் திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணை மொழி ஐம் பது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடு கம், ஆசாரக் கோவை, பழமொழி, சிறு பஞ்சமூலம், இன்னிலை, முதுமொழிக்காஞ்சி, ஏலாதி என்பன வாகும். இவற்றைக் குறிக்கும் செய்யுளைக் கீழே காண்க :

''நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைசொற் காஞ்சியொடு ஏலாதி என்பவே
கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு.''

இந்நூல்கள் யாவும் மக்களுக்கு உறுதி பயக்கும் சிறந்த உண்மைப் பொருளை எடுத்துரைக்கும் இயல்பினை யுடையனவாய் இலங்குகின்றன. இவை அறநெறியை யுணர்த்தி, மறநெறியை விலக்கும் சீரிய செந்தமிழ்க் களஞ்சியங்கள் எனக் கூறுதல் மிகையாகாது. பண்டைத் தமிழரது பண்பட்ட வாழ்க்கை முறையையும், அவர்களுடைய சிறந்த ஒழுக்க நெறிகளையும் அறிந்து கொள்வதற்கு இவை பெரிதும் உதவுகின்றன. இக்கீழ்க் கணக்கு நூல்களை முறையாகப் பயிலும் ஒருவன், ஒழுக்கத்தின் உறைவிடமாகவும், நற்குணக்குன்றாகவும், நன்னெறியை நன்குணர்ந்து நாட்டிற் பரப்புகின்ற நல்லறிஞனாகவும் செந்தமிழின் சிறப்பினைச் செம்மையாக அறிந்துகொண்ட செம்மலாகவும் விளங்குவான் என்பது ஒருதலை, கீழ்க்கணக்கு வகையைச் சேர்ந்த நூல்கள் பதினெட்டும் தனித்தனியே வெவ்வேறு ஆசிரியர்களால் இயற்றப்பட்டன வாக இருப்பினும், அவை யாவும் கருத்துக் களில் ஒன்றுபட்டிருத்தலைக் காண இயலும். இக் காலத்தில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் தலை சிறந்து விளங்கும் திருக்குறளையே பலரும் பயின்று வருகின்றனர். அடுத்தபடி நாலடி ஓரளவு பயிலப்படுகின்றது. இவையன்றிப் பழமொழி, இனியவை நாற்பது, இன்னா

நாற்பது, திரிகடுகம், நான்மணிக்கடிகை. சிறு பஞ்சமூலம், ஆசாரக்கோவை ஆகிய நூல்களி னின்று சிற்சில பாக்கள் பள்ளிகட்குரிய பாட நூல்களில் இடம்பெறுகின்றன. இவையும் தனித்தனியே பயிலப்படுகின்றனவே யன்றி, ஒப்புநோக்கிப் பயிலப்படுவதில்லை. அங்ஙன மின்றி மக்கள் வாழ்க்கைக்கு அடிப்படையான கருத்துக்களைப் பதினெண் கீழ்க்கணக்கு நூல் களின் ஆசிரியர்கள் தத்தம் நூல்களில் எவ்வாறு கையாண்டிருக்கிறார்கள் என்பதை முடிந்த வரையில் ஒப்பிட்டு விளக்குவதே இக்கட்டுரை யின் நோக்கமாகும். எடுத்துக் காட்டாகச் **'செல்வத்தின் சிறப்பு'** என்னும் பொருளை அடிப் படையாகக் கொண்டு, கீழ்க்கணக்கு நூல்களிற் காணப்படும் கருத்தொற்றுமையை நாம் ஆராய் வோம் :

இம் மாநிலத்தில் மக்களாய்ப் பிறந்தோர் இல்லற வாழ்விற்குரிய தங்கள் கடமைகளைச் செவ்வனே ஆற்றி இன்புற்று இனிது வாழ வேண்டுமாயின், இன்றியமையாது வேண்டப் படுவது செல்வமே என்பதனை ஆன்றோர் பல ரும் கூறியுள்ளனர். அச்செல்வமானது ஆற்றங் கரை மரம்போன்றும், ஆற்றினிடையே தோன் றும் மேடு பள்ளங்கள் போன்றும் அழியக்கூடிய நிலையினையுடையதாக இருந்தும், அதனைப் பெற் றிருக்கும் மக்களையே இவ்வுலகம் மதிக்கின்றது. செல்வத்தை யிழந்து வறுமையில் சிறுமையுற்று வாடும் ஒருவனை ஈன்றெடுத்த அன்னையும், இல் லாளுங்கூட விரும்புவதில்லை யென்று.

—"இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த
தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல்."

என்னும் நல்வழிச் செய்யுளின் அடிகள் குறிப்பிடுகின்றன. ஆகவே பண்டைப் புலவர் பலர் செல்வத்தின் சிறப்பைக் குறித்தும், அதனை ஈட்ட வேண்டிய முறையைக் குறித்தும் பலவாறு கூறியுள்ளனர்.

மக்கள் அடைவதற்குரிய உறுதிப் பொருள்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்குமே யாகும். அவற்றுள் வீடு எனப்படும் மோட்சமானது இம்மையில் நல்வினையைச் செய்தோர் மறுமையில் அடையக்கூடியதாகலின் ஏனைய மூன்றுமே ஒருவன் இம்மையில் எய்துவதற்குரியனவாம். அம்மூன்றிலும் நடுவிடம் பெற்றுவிளங்கும் செல்வமே மிகச் சிறந்தது. அச் செல்வத்தைச் செம்மையாகப் பெற்றோரே நல்வினைக்குக் காரணமான பல அறச் செயல்களைப் புரிந்து, இன்பத்தையும் நுகர்ந்து மறுமையில் மோட்சத்தை எய்த முடியும். அப்பொருளைப் பெறுதவன்கொல்லனது உலைக்களத்தில் எறியப்பட்ட ஆமையானது வருந்துதல் போல, பெரிய வறுமைத் துன்பத்தில் சிக்கித் துயருற்றுச் சிறுமை எய்துவான் என்று,

"வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவணது எய்த இருதலையும் எய்தும்,
நடுவணது எய்தாதான் எய்தும் உலைப்பெய்து
அடுவது போலும் துயர்"

என்னும் நாலடிச் செய்யுள் உணர்த்துகின்றது. நாலடியார் என்பது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் மிகவும் சிறப்பு வாய்ந்த நீதி நூலாகும். தமிழ் மறையாகிய திருக்குறளோடு ஒப்ப எண்ணத்தகும் பெருமையினை யுடையது. சமண மதத்தைச் சேர்ந்த துறவிகளால் இயற்றப்பட்ட இந்நூல், செல்வத்தைப் பெற்றார்க்கும், அதனைப் பெருதார்க்கும் உள்ள வேற்றுமையைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

"பசுவின் கன்று மிக இளமையானதாக இருப்பினும் உயர்ந்த விலைக்கு மதிக்கப்படும். அது போன்று அறிவு வளர்ச்சிக்கு ஏதுவாக விளங்கும் கல்வியைப் பெற்றிராதவராயினும், செல்வத்தைப் பெற்றிருப்பவரது வாயில் பிறக்கும் சொற்கள் சிறப்படையும். கற்றுணர்ந்தோராயினும் வறுமையின் கோரப் பிடியிற் சிக்கி வாழ்விழந்தோர் வாயிலிருந்து தோன்றுகின்ற சொற்கள் சிறு மழை பெய்து சிறிதளவு நனைந்துள்ள நிலத்திற் செலுத்தப்படும் ஏரானது, அந் நிலத்தினுள் ஆழ்ந்து செல்லாமல் மேலாக ஊர்ந்து செல்வதைப் போன்று அதிகமாக மதிக்கப் பெருதனவாகும்," என்று நாலடியார் நவில்கின்றது. இதனை,

**"நல்லாவின் கன்ருயின் ஆகும் விலைபெறூஉம்;**
**கல்லாரே யாயினும் செல்வர்வாய்ச் சொற்செல்லும்;**
**புல்லீரப் போழ்தின் உழவேபோல் மீதாடிச்**
**செல்லாவாம் நல்கூர்ந்தார் சொல்."**

என்னும் செய்யுள் வாயிலாக உணரலாம். இனி இக் கருத்தைப் பற்றி ஈரடியென இயம்பப்படும்

திருக்குறள் கூறுவதை நோக்குவோம்; நடுவணது எய்த இருதலையும் எய்தும், என நாலடியார் உரைப்பதைப் போல இந்நூலும் "சிறந்த பொருளை நிரம்பப் பெற்றோர்க்கு அறத்தைச் செய்தலும், இன்பத்தை நுகர்தலும் எளிய வாகும்," என்ற கருத்தால்,

"ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு,"

என்று உரைக்கின்றது. மேலும் செல்வர்க்கும், வறியோர்க்கும் உள்ள வேறுபாட்டைக் கூறத்துணிந்த திருவள்ளுவர், "பொருளற்ற வறிஞரை எல்லாரும் இகழ்ந்துரைப்பர். செல்வம் படைத்தோரை உயர்ந்தவராகக் கருதிப் பல சிறப்புகளைச் செய்வர்," என்னும் கருத்தால்,

"இல்லாரை எல்லாரும் எள்ளுவர்; செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு."

எனச் செப்பினர். மேலும், அன்பும், அறனும், அருளும் இன்பமிக்க இல்வாழ்க்கையில் இணைந்து நிற்பதற்கும் செல்வமே இன்றியமையாதது என்னும் கருத்தால் "அன்பென்னும் அன்னை ஈன்ற அருள் என்னும் செவிலித்தாயால் செம்மையாக வளர்க்கப்படும்," என்று கூறினர் வள்ளுவப் பெருந்தகையார். இதனை,

"அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு."

என்னும் அவரது பொய்யா மொழியின் வாயிலாக உணர முடியும். இது போன்று செல்வத்தின் சிறப்பை யுணர்த்தும் சீரிய குறட்பாக்

கள் பல, திருக்குறளில் இடம் பெற்றுள்ளன. ஈரடியும் நாலடியும் இயம்பியதைத் தழுவி இன்னிலை யென்னும் நூல் கூறுவதை நோக்குவோம். இந்நூல் பொய்கையார் என்ற புலவரால் இயற்றப் பட்டது. "நிலவள நீர்வளங்களை யளிக்கும் செல்வத்தைப் பெற்றுள்ளவர்கள் அருளுடையார் சேருகின்ற வீட்டுலகத்தை விரைவில் அடைவர். அருள் என்னும் பண்பினை வளர்க்கும் செவிலித் தாய் செல்வமே யாகும். அச் செல்வமானது அறியாமைப் பிணியை யகற்றும் அருமருந் தாகிய கல்வியைப் பெற்றிராத அற்பர்களையும் அழகுபடுத்தும்" எனச் செல்வத்தின் சிறப்பைக் குறித்து இன்னிலை யுரைக்கின்றது. இதனை,

"மண்ணீர் உடையார் வழங்கிச் சிறுகாலைத்
தண்ணீரார் சாரும் நிலம்சார்வார்:-உண்ணீர்
அறியின் அரும்செவிலி மாண்பொருளே வெண்ணீர்ச்
சிறியரையும் ஏர்படுத்தும் செய்."

என்னும் செய்யுளின் வாயிலாக உணரலாம்.

(அரும் பொருள் :—சிறுகாலை—விரைவில்; தண்ணீரார் — தண்மை+நீரார்—குளிர்ந்த தன்மையினை யுடையவர்; உள்நீர்—உண்மைத் தன்மை; வெண்ணீர் — வெண்மை நீர் — வெள்ளைத் தன்மை (அறிவின்மை); ஏர்—அழகு.

இச் செய்யுள், "அருள் என்னும் அன்பீன் குழவி" யென்னும் குறட்பாவின் கருத்தைத் தழுவி யுள்ளதை நோக்குக. மேலும் இன்னிலையானது செல்வ முடையார்க்கும், அஃது இல்லார்க்கும் உள்ள வேறு பாட்டைக் கூறும்

தன்மையும், நாலடியும், குறளும் கூறுகின்ற கருத்துக்களையே தழுவி யமைந்துள்ளது. "செல்வத்தை இடைவிடாது ஈட்டுதலே ஒருவனது கடமை. அவ்வாறு ஈட்டப்படுகின்ற செல்வமானது அவனுக்கு எவ்விடத்திலும் உற்ற துணையாக நின்று உதவும். செல்வத்தைப் பெற்றுள்ள ஒருவனுக்கு, அவன் சென்று சேரும் இடமெல்லாம் சுற்றம் சூழும். அதனைப் பெறாதவன் செல்லும் இடங்களில் முன்பு உறவினராய் இருப்பவரும் வேறாகிவிடுவர்," என்னும் கருத்தால் இன்னிலை யானது.

"உடைமையரு தீட்டல் உறுதுணையாம் யாண்டும்
உடைமையார்ச் சென்றக்கால் ஊரெல்லாம் சுற்றம்
உடைமைக்கோல் இன்றங்குச் சென்றக்கால்
உடைவரும் வேறு படும்." [சுற்றம்

என்று உரைக்கின்றது. இச் செய்யுளானது,

"காலாடு போழ்தில் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவர்."

என்னும் நாலடியின் கருத்தையும்,

"அறம்சாா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்."

என்னும் குறட்பாவின் கருத்தையும் தழுவியுள்ளது. இது போன்றே பொருளின் இயல்பினையுணர்த்தும் ஏனைய இன்னிலைச் செய்யுட்களும் மற்றைய கீழ்க்கணக்கு நூல்களைத் தழுவியே யமைந்துள்ளன.

இனி முன்றுறையரையனார் இயற்றிய பழமொழியென்னும் நூல் செல்வத்தைப் பற்றி ஏனைய

கீழ்க்கணக்கு நூல்களேயே தழுவி இயம்புவதை நோக்குவோம்: "தொல்லைகள் பலவற்றை இல்லாமற் போக்கிடும் செல்வத்தைப் பெற்றுள்ள மக்களை அருள் உள்ளம் படைத்த ஆன்றோரும், கற்றுணராக் கடையரும் புகழ்வர்," என்னும் கருத்தால், பழமொழி,

"அருளுடை யாருமற் றல்லா தவரும்
பொருளுடை யாரைப் புகழாதா ரில்லை,"

என உரைக்கின்றது. இச்செய்யுள் "இல்லானை யெல்லாரும் எள்ளுவர்" என்னும் ஈரடியின் கருத்தை யொத்திருப்பதை நோக்குக. "நடுவணது எய்த இருதலையும் எய்தும்" என்னும் நாலடிச் செய்யுளின் கருத்தைத் தழுவி, பின் வரும் பழமொழிச் செய்யுள் விளங்குவதையும் காணலாம்:

"ஒல்லாத வின்றி உடையார் கருமங்கள்
நல்லவாய் நாடி நடக்குமாம்;-இல்லார்க்கு
இடரா இயலும் இலங்குநீர்ச் சேர்ப்ப !
கடலுள்ளும் காண்பவே நன்கு."

"பொருளுடையார் செய்யத் தொடங்கிய செயல்கள் எவ்வித இடையூறும் இன்றிச் செவ்வனே முடியும். அவர் தமது பொருளின் வலிமையால் செல்லுதற்கரிய இடங்களுக்கும் சென்று, செய்தற்கரிய செயல்களையும் முடிப்பர். பொருளற்றவர் தொடங்கும் செயல்கள் யாவும் அவர்க்கு இடையூறு விளைவிப்பனவாகவே இருக்கும்." என்பது இச்செய்யுளின் பொருளாகும். இச்செய்யுள் கூறுவதையே தழுவிப் பின்வரும் குறட்பா உரைப்பதை உன்னுக.

**"குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்(து)
உண்டாகச் செய்வன் வினை."** **[ஒன்று**

"தன்னிடத்தில் நிறைந்த செல்வத்தைப் பெற்றிருக்கும் ஒருவன் ஒரு செயலை மேற்கொள்வது, ஒருவன் மலைமேல் ஏறி நின்று நிலத்தில் சண்டை செய்கின்ற யானைகளைக் காண்பதற்கு நிகராகும்," என்பது அதன் பொருளாகும். மலையின்மீது ஏறி நின்றவன் உள்ளத்தில் அச்சமும், எவ்வித வருத்தமும் இல்லாமல், நிலத்தில நின்று போர் புரியும் யானைகளைக் காண்பதைப் போன்று, செல்வத்தைப் பெற்றுள்ள ஒருவன் தான் எவ்வித வருத்தமுமில்லாமல் நினைத்த காரியத்தை முடித்துக்கொள்வான்," என்பது இதன் கருத்தாகும்.

மேலும் பழமொழியானது, "செல்வத்தைச் சிறப்புறப் பெற்றோர், ஒரு செயலை முடித்தற் பொருட்டு மற்றொருவரை நாடி அவர்பாற் செல்லவேண்டுவதில்லை. பழுத்த மரத்தை நாடிச் செல்லும் பறவைகள் போல, அச்செல்வமுடையவரை நாடி மற்றையோர் வருவர்," என்னும் கருத்தால்,

**"அருமை யுடைய பொருளுடையார் தங்கண்
கருமம் உடையாரை நாடார்,"**

என உரைக்கின்றது. இது போன்றே பழமொழியின் ஏனைய செய்யுட்களையும் நோக்கினால் அவை கீழ்க்கணக்கு நூல்களோடு கருத்தொற்றுமை கொண்டு விளங்கும் தன்மையை உணரலாம்.

"நான்மணிக்கடிகை யென்னும் நூலும் பதி னெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்ருகும். விளம்பிநாகனுர் என்ற நல்லிசைப் புலவரால் இயற்றப்பட்ட இந்நூலில் அமைந்துள்ள செய் யுட்கள் ஒவ்வொன்றும், சிறந்த இரத்தினங்களைப் போன்று, மக்களால் மேற்கொள்ளத் தகும் நந்நான்கு சிறந்த கருத்துக்களைத் தெரிவிக்கின்ற காரணத்தால், இஃது இப்பெயரைப் பெற்றது. செல்வத்தின் சிறப்பைக் குறித்து இந்நூல் கூறு வதை நோக்குவோம்: 'அறம்சேர்ந்த போகமுடைமை பொருளாட்சி,' யெனக்கூறுகின்றது, இந் நூலில் அமைந்துள்ள ஒரு செய்யுள். இதன் பொருள், "அறத்தோடு பொருந்திய இன்பத்தை நுகரும் தன்மை பொருளுடைமை காரணமாக உண் டாகும்," என்பதாகும். 'நடுவணது எய்த இருதலை யும் எய்தும்' என்ற நாலடிச் செய்யுளின் கருத்தை யும், "ஒண்பொருள்காழ்ப்ப' எனத் தொடங்கும் குறட்பாவின் கருத்தையும் இச்செய்யுள் தழுவி யிருப்பதைக் காண்க.

சிறுபஞ்சமூலம் எனப்படும் மற்ருெரு கீழ்க் கணக்கு நூலும் இக்கருத்தையே தழுவி, "பொரு ளுடையான் கண்ணதே போகம்" எனவும், "செய்த பொருளினுன் ஆகுமாம் போகம்," எனவும் குறிப்பிடு கின்றது. மேலும் செல்வத்தை யிழந்து வறுமை யுற்ருேர் பல சிறப்புக்களையும் இழந்து அழுகி லுப் குன்றுவர் என்ற கருத்தால், "நலனும் இளமையும் நல்குரவின் கீழ்ச்சாம்" எனக் கடிகை யுரைக்கின்றது.

"தொல்வரவும் தோலும் கொடுக்கும் தொகையாக நல்குரவு என்னும் நசை."

என்னும் குறட்பாவும் இதனையே உணர்த்துகின்றது. "பெருமையைக் கெடுத்துச் சிறுமையைக் கொடுக்கும் வறுமையானது, தன்னாற் பற்றப் பட்ட மக்களுடைய குடிப்பிறப்பின் மேன்மையையும், எழிலையும் சிதைத்துவிடும்," என்பது இதன் கருத்தாகும். பின்வரும் கடிகைச் செய்யுளைக் கவனிக்க :

> "கைத்து(உ)டையான் காமுற்றது உண்டாகும் [வித்தின்
> முளைக்குழாம் நீருண்டேல் உண்டாம் திருக்குழாம்
> ஒண்செய்யாள் பார்த்துறின் உண்டாகு மற்றவள்
> துன்புறுவா ளாகிற் கெடும்."

இச்செய்யுள் செல்வமுடையோனின் சிறப்பைக் குறிக்கின்றது. "தன்கையில் பொருளைப் பெற்றுள்ள ஒருவன் தான் விரும்பிய பொருள்கள் யாவும் கிடைக்கப் பெறுவான். நீர்ப்பாய்ச்சல் தடைப்படாது விளங்குமாயின், விதைகளிலிருந்து முளைகள் தோன்றிச் செடியாகும். அது போன்று திருமகளது அருள் நோக்கம் ஒருவன் மீது பதிந்தால், அவனுக்கு எல்லாச் செல்வமும் உண்டாகும். அத்திருமகள் வெறுப்பாளாயின் உள்ள செல்வமும் அழியும்," என்பது இதன் பொருளாகும். "பொருளுடையான் கண்ணதே போகம்," என்னும் சிறுபஞ்சமூலத்தின் கருத்தும்,

> "ஒல்லாத வின்றி உடையார் கருமங்கள்
> நல்லவாய் நாடி நடக்குமாம்."

என்னும் பழமொழியின் கருத்தும் இதனையே தழுவி யமைந்துள்ளன.

இனி, இன்னாநாற்பது என்னும் நூல் இயம்புவதை நோக்குவோம்: செல்வமில்லாதவர்கள் அழகான உடலமைப்பையும், சிறந்த நுண்ணறிவையும் பெற்றிருப்பினும் பயனில்லை. அவர்களது அழகு மற்றையோரால் புகழப்படாது, வறுமையின் காரணமாக வளமிழந்து குன்றும் என்ற காரணத்தால், "**வளமையிலாளன் வனப்பு இன்னா**' என நவின்றது இன்னா நாற்பது. மேலும், செல்வத்தைப் பெருதவன் பிற நற்செயல்களைச் செய்ய இயலாது. மற்றையோர்க்கு உதவி செய்ய வேண்டுமென அவன் உள்ளம் விரும்பினும், பொருளில்லாத காரணத்தால் அவனது எண்ணம் நிறைவேருது. கண்ணொளியை யிழந்தவன் இக்காசினியின் அழகைக் காண விரும்புவது போல, செல்வத்தைப் பெருத வறியவன் பிறர்க்கு உதவி செய்ய விரும்புவது பயனற்றுப் போகும் என்னும் கருத்தால் '**பொருளிலான் வேளாண்மை காமுறுதல் இன்னா**" எனவும், "**கொடுக்கும் பொருளிலான் வள்ளன்மையின்னா**" எனவும் இன்னா நாற்பது கூறியுள்ளது. "**வளமில்லாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்,**" என்று நான்மணிக்கடிகையும் இதனையே இயம்புகின்றது. பின்வரும் திருக்குறட் செய்யுளும் இக்கருத்தையே தழுவி யிருப்பதைக் காணலாம்:

**"தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை**
**வாளாண்மை போலக் கெடும்."**

"பொருளீட்டுதற்கு உரிய முயற்சிகளைச் செய்யாத ஒருவன், பிறர்க்கு உதவி புரிய

வேண்டுமென எண்ணுதல், உள்ளத்தில் உறுதி யற்ற பேடியின் கையில் கொடுக்கப்பட்ட வாளா னது பயனற்றுப் போதல் போலப் பயனற்ற தாகவே ஒழியும்,'' என்பது இதன் கருத்தாகும்.

இதுகாறும் பதினெண் கீழ்க் கணக்கு நூல் களின் துணைகொண்டு மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதது செல்வம் என்பதனை யுணர்ந் தோம். மேலும் இந்நூல்கள் சிறப்பு மிக்க செல் வத்தை அறவழியில் ஈட்டக்கூடிய முறையையும், அதனை நற்செயல்களில் செலவழிக்க வேண்டிய முறையையும் உணர்த்தியுள்ளன.

''செல்வம் நிலையற்றது. வண்டியின் சக்கரம் மேலும் கீழுமாக மாறி மாறிச் செல்வதைப் போல, எவரிடமும் நிலைத்து நில்லாத தன் மையை யுடையது. ஆதலின் பெற்ற செல்வத் தைக் கொண்டு தம்மை யுற்றோருக்குத் துணை புரிந்து வாழ்தல் வேண்டும்,'' என்னும் கருத் தால் நாலடி,

**''துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்**
**பகடு நடந்தகூழ் பல்லாரோடு உண்க**
**அகடுஉற யார்மாட்டும் நில்லாது செல்வம்**
**சகடக்கால் போல வரும்,'**

என்று நவின்றது. வறியோர்க்கு அளித்தற் பொருட்டு வான் பொருளைத் தேடுதல் வேண் டும் என்னும் கருத்தால் **'ஈதற்குச் செய்தபொருளை'** என இயம்புகிறது திரிகடுகம். நிலைத்து நில்லாத செல்வத்தை நிலையென நினைத்து, அதனை ஈட்டி

இரப்போர்க்கு வழங்காமல் வாழ்கின்ற கொடி யோர் ஈதலினுல் வருகின்ற இன்பத்தை அறி யார் போலும்,'' எனச் செல்வத்தின் உண்மை நிலையை உணராத செல்வரை, எள்ளி நகையாடு கின்ருர் வள்ளுவப் பெருந்தகையார் இதனை,

''ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.'

என்னும் அவரது தெள்ளிய குறட்பாவின் வாயி லாக உணரலாம்.

இதுவரையில் செல்வத்தின் சிறப்பையும், அதனை அறவழியில் ஈட்டி நுகர்தற்குரிய தன் மைகளையும் கீழ்க்கணக்கு நூல்கள் கூறுகின்ற கருத்துக்களில் காணப்படும் ஒற்றுமையை நோக்கினோம். இதுபோன்று இந்நூல்கள் மக்க ளுக்குப் பயனளிக்கும் மற்றைய பொருள்களைப் பற்றியும் ஒன்றுபட்ட கருத்து உடையனவாய் இருத்தலை இவற்றைப் படிக்கின்ற வாய்ப் பினைப் பெற்ருேர் உணரமுடியும். சிறந்த அறி வுரைகளைக் கூறுகின்ற கீழ்க்கணக்கு நூல்களைப் படித்து, அவற்றின் பெருமையை யுணர்வது, மிகுந்த இன்பம் பயக்கும் என்பதில் ஐயமில்லை.

# 4. நரவாணதத்தன்

வளங்களிற் சிறந்த கௌசாம்பி நகரைத் தலை நகராகக் கொண்டு, வத்தவ நாட்டை உதயணன் என்ற மன்னன் அறநெறி வழுவாது, மன்னு யிரைத் தன்னுயிர் போல் மதித்துப் பலரும் புகழும்படி ஆண்டு வந்தனன். உடலோடு சேர்ந்து இயங்கும் உயிரைப் போன்று அம்மன்னனுக்கு அறிவுரை கூறி நாட்டின் நல்லாட்சியைச் சிறப் புறக் கவனிக்க யூகி, உருமண்ணுவா, வயந்தகன், இடவகன் என்ற நல்லமைச்சர் நால்வர் விளங் கினர். அவர்களுள் யூகி யென்பான் அறிவாற் றல்களிற் சிறந்தவனாய் உதயணனுக்கு உற்ற தோழனாய் இருந்து, பல அருஞ்செயல்களைப் புரிந்தனன். மதி நலம் சிறந்த அம்மந்திரியின் பெரு முயற்சியின் விளைவாகவே மன்னன் உதய ணன் தன் மனம் விரும்பிய மங்கை வாசவதத் தையை மணம் புரிந்து கொண்டான். ஏனைய அமைச்சர்களும் உதயணனுக்குத் துணைவர்க ளாகவே விளங்கி, மன்னன் உதயணன் பொருட்டுத் தமது இன்னுயிரையும் கொடுக்க உறுதி பூண்டிருந்தனர்.

உதயணனுக்கு வாசவதத்தையைத் தவிர பதுமாவதி, மானனீகை, விரிசிகை யென்ற தேவி யர் மூவர் இருந்தனர். அந் நால்வரும் ஒற்றுமை யுடையவராய், மன்னனிடத்தில் மாறாத அன்பு பூண்டவராய் ஒழுகி வந்தனர். இவ்வாறு மதி யமைச்சர் நால்வர் துணை புரிய, எழில் மங்கையர் நால்வரோடு, மக்கள் மனங்களிக்க, மாதவத்தோர் கொண்டாட உதயணன் இம் மாநிலத்தை ஆண்டுவந்த நாளில், ஒருநாள்,

அவனது அவைக்கு வழக்கு ஒன்று வந்தது. பிறர் பொருளையும் தமது பொருள் போலப் பாதுகாத்து, துலாக்கோலைக் கருவியாகக் கொண்டு தூய முறையில் தம் வாணிகத்தை நிகழ்த்தி, வளமுற வாழ்ந்து வரும் வணிகர் குலப் பெருமக்கள் சிலர், அவ்வழக்கை முன் னிட்டு, மன்னனது அவையை யடைந்தனர். அமைச்சர்களும் அறிஞர்களும் புடைசூழ, ‘விண் மீன்களுக்கு நடுவில் விளங்கும் வெண்மதி போல வீற்றிருந்த உதயணனிடம் அவர்கள் தமது குறையை உரைத்தனர். அப்பொழுது மன்னன், அவ் வழக்கைத் தீர்க்கும்படி அமைச் சன் உருமண்ணுவாவிற்கு ஆணையிட்டான்.

**உருமண்ணுவா வழக்காராய்தல் ;**

மன்னனின் ஆணையை மேற்கொண்ட உரு மண்ணுவா அவர்களது வழக்கு யாது என வினவினன். அங்கிலையில் வணிகப் பெருமக்கள் மன்னனையும், அமைச்சனையும் நோக்கி, "வெற்றி மிக்க சேனைகளைக் கொண்ட வீரமிக்க மன்னர் பெருமானே! மதிநலம் வாய்ந்த அமைச்சரே! யாம் கூறுவதைக் கேட்டருள்வீர்! வணிகன் ஒரு வனுக்கு மனைவியர் மூவர் உண்டு. அம்மூவரில், ஒருத்திக்குப் பிள்ளைகள் மூவர். அம்மூவரும் வெவ்வேறான பண்புகளை யுடையவராக விளங்கி னர். யாவருக்கும் மூத்தவன் அலை வீசும் கடலைக் கடந்து சென்று பெரும்பொருள் ஈட்டும் இயல்பினன். இரண்டாமவன் தன் இல்லத்தி லேயே இருந்து, பல பொருள்களை வாணிகம் செய்து பொருளீட்டும் இயல்பினன். யாவ

ருக்கும் இளையவன், கிடைத்தற்கரிய பண்டங்களைச் சேகரித்து வைத்து, அவை தேவைப்படும் நேரத்தில் மக்களுக்கு விற்று, மாண்புமிக்க செல்வத்தைத் திரட்டி மதிப்போடு வாழ்ந்தான். பொன் கிடைக்கும் தீவிற்குச் செல்லவேண்டுமென்ற பெரு விருப்பினுல் மூத்தோன் கலத்தில் ஏறிக் கடலிற் சென்ற போது புயற்காற்றினுல் அக்கலம் நிலைகுலைந்து நீரில் மூழ்கிச் சிதைய, அவன் கடலில் ஆழ்ந்து இறந்தனன். அதைக் கேட்ட அவனுடைய உடன்பிறந்தார் மிக வருத்தமுற்று, தம் தமையனுக்கு ஆற்றவேண்டிய இறுதிக் கடன்கள் யாவையும் முடித்துத் தம் தாயிடம் சென்று, தமையனுடைய உடைமைகள் யாவும் தமக்குச் சேரவேண்டும் எனக் கூறினர். மைந்தனை யிழந்து கலங்கிய அவள் தன்னுடைய இளைய மைந்தர் வினுவிற்கு விடையொன்றும் கூருதவளாய் வாளா இருந்தனள். ஆதலின் இவ் வழக்கின் முடிவினை யறியும் பொருட்டே உங்களை யடைந்தோம்." எனக்கூறி வணங்கி நின்றனர்.

வழக்கினைக் கேட்ட உருமண்ணுவா, அவர்களை நோக்கி, "கடலில் மாய்ந்த வணிகனின் மனைவியின் மனக்கருத்தை யறிந்துவந்தீர்களா?" என வினவினுன். அதற்கு அவர், "அவள் தன் கணவன் இறந்தமையால் வருத்தமுற்று ஒன்றும் கூற இயலாதவளாய் இருக்கிருள். அன்றியும், அவள் கருவுற்றிருக்கிருள்," எனப் புகன்றனர். அவர்களது உரையைக் கேட்ட உறுமண்ணுவா, சிறிது சிந்தித்துப் பின்னர் அவர்களிடம், "நீங்

கள் இறந்த வணிகனுடைய பொருட்களைக் கொண்டு வாருங்கள். அவற்றை ஏனைய வணிகர் இருவரும் பார்த்து, முத்திரை வைத்த பின்னர், நடுநிலையாளன் ஒருவனிடம் பன்னிரண்டு மாதங்கள் வரை கொடுத்து வைத்திருங்கள். அதற்குள் மூத்தவன் மனைவி ஆண் மகவைப் பெற்றெடுப்பின், அப்பொருள்களைப் பிறந்த அக்குழந்தைக்குக் கொடுத்து விடுங்கள். பெண் குழவி பெறுவாளாயின், அப்பெண்ணிற்கு உரிய பாகத்தை ஒதுக்கி, மற்றையவற்றை உடன் பிறந்தார் இருவருக்கும் பகிர்ந்தளியுங்கள், இதுவே சிறந்ததாகும்," என உரைத்தனன். வணிகரும் அதற்கு உடன்பட்டுத் தத்தம் இல்லத்திற்கு ஏகினர்.

**மன்னன் மனக்கவலை :-**

வழக்கின் முறைகளை யெல்லாம் கவனித்த மன்னனுக்கு 'ஏனைய செல்வத்தினும் மக்கட் செல்வமே சிறந்தது' என்ற எண்ணம் உண்டாயிற்று. மழலை பேசி மகிழ்விக்கும் மக்களைப் பெறாதவர் இம்மாநிலத்தில் வாழ்வதில் பயனில்லை யென அவன் எண்ணினான். தன் குலத்தை விளக்குவதற்கு மைந்தன் ஒருவன் இல்லையே யென அவன் மனம் வாட்டமுற்றது. மன்னன் கலங்கிய உள்ளத்தோடு மங்கை வாசவதத்தையைக் காணச் சென்றான். அந்நிலையில் அவள் தவ ஒழுக்கத்திற் சிறந்த துறவிகளுக்கு உணவளித்து, அவர்களது ஆசியைப் பெற்று, தோழியர் புடைசூழ, எழில் மிக்க மாளிகையின் ஒருபுறத்தில் இருந்தனள். அவ்வாறு இருந்த

போது அழகிய இறக்கைகளைக் கொண்ட தாய்ப் புறா ஒன்று, தான் மிகவும் முயன்று வாயில் கவ்விக்கொணர்ந்த இரையைத் தன் குஞ்சுகளின் வாயிற் கொடுத்து, அவற்றின் பசியைப் போக்குவதை நோக்கி, அந்தப்பெண் புறுவின் தாயன்பினை அவள் வியந்து போற்றினாள். தானும் அவ்வாறு அன்புடன் பேணி வளர்ப்பதற்கு அருமை மகவு இல்லையே என வருந்தினாள். அந்நேரத்தில் அங்கு வந்த உதயணன், தன் மனைவியின் மனக்கவலையை யுணர்ந்த அவளைத் தேற்றி விட்டு உறங்கச் சென்றான். வாசவதத்தை கண்ட காட்சியை,

> "விரிகொடிப் பவழத்தின் விரிந்த சேவடிக்
> காழ் அகிற் புகைநிறம் கடுக்கும் தூவிப்
> பல்சிறைப் புறவம் பரிந்து உடன்ஆடி
> அவ்வாய்க் கொண்ட ஆரிரை அமிழ்தம்
> செவ்வாய்ப் பார்ப்பிற்குச் சேர்ந்து அவண்
> [சொரிதலின்,"

என்னும் பெருங்கதை அடிகள் உணர்த்துகின்றன.

(அரும் பொருள் : சேவடி—சிவந்த பாதம்; காழ் அகில்—முற்றிய அகில்; கடுக்கும்—ஒத்திருக்கின்ற; தூவி—சிறகு; பல்சிறைப் புறவு—பல இறகுகளைக் கொண்ட புறா; அ+வாய்— அழகிய வாய்; ஆர் இரை —கிடைப்பதற்கு அருமையான உணவு; பார்ப்பு— குஞ்சு; அவண் —அவ்விடம்.)

## உதயணன் கனவு கண்டு அதன் பயனை அறிதல் :

பஞ்சணையிற் கிடந்து உறங்கிய மன்னன், நள்ளிரவில் கனவு ஒன்றைக் கண்டான். அழகிய தெய்வப் பெண் ஒருத்தி அவனை யணுகி, "எமது

தலைவனான குபேரன் உமக்கு ஏழு உலகங்களை யும் அளித்தற் பொருட்டு அழைக்கின்றான். வருக,'' என இயம்பினாள். உதயணன் அப் பெண்மணியிடம்,''என் இல்லாளாகியவாசவதத் தையையும் உடன் அழைத்துச் செல்ல என் உள்ளம் விரும்புகிறது. அவளையும் அழைத்து வருகிறேன்,'' எனக்கூறி, வாசவத்தையையும் அழைத்துக்கொண்டு வான வெளியில் அத் தெய்வ மகளின் துணையால் பறந்தனன். சென்ற அவ்மூவரும் பெருஞ் செல்வத்திற்கு இறை வனான குபேரனது அளகாபுரி யென்னும் அழ கிய நகரையடைந்தனர். அங்கு உதயணன் குபே ரனது அவையை நாடிச் சென்றபோது, பெருநி திக் கிழவனாகிய அவன், உதயணனை வரவேற்று, இருக்கை யளித்து உபசரித்தனன். பின்னர் அவ னது கட்டளைப்படி, தெய்வ மகள் ஒருத்தி, அழ கிய மணிமுடி யொன்றை உதயணனிடம் தர, அவன் குபேரனிடம் விடை பெற்றுக்கொண்டு கௌசாம்பி நகர் நோக்கித் திரும்பினான்.

நகரை யடைந்து, மனையுட் புகுந்த மங்கை குபேரன் தன் கணவனுக்கு அளித்த மணிமுடி யின் எழிலை நோக்கி வியந்தாள். கதிரவனைப் போன்று பொன்னொளி வீசித் திகழ்ந்த அப் பொன்முடிக்கு ஒப்பாக வேறு முடிகள் இல் லாமை கண்டு மகிழ்ந்தாள். அம்மணி முடியைத் தனக்கு அளிக்க வேண்டுமென, தத்தை தன் கணவனைக் கேட்டதும், அவனும் தடையின்றி அதனை அவளுக்குக் கொடுத்தான். வாசவதத்தை பெறுதற்கரிய அதனை மகிழ்ச்சிப்பெருக்கால் மார்

போடு அணைத்துக்கொள்ள, அது வெங்கனலைப் பொழிகின்ற செங்கதிர் போலத் தோன்றி அவளது வயிற்றினுட் புகுந்தது. உடனே அவள் அச்சத்தால் திடுக்கிட்டு எழுந்தாள். இதுவே உதயணனன் கண்ட கனவு.

இக்கனவைக் கண்ட உதயணனன் அதன் பயனையறிய விரும்பி, தன் மனைவியோடு, நூல்களின் பொருள் நன்குணர்ந்த அறிஞர்களிடம் சென்று தான் கண்ட கனவைக் கூறினான். அவர்கள் மன்னன் கண்ட கனவின் பயனை நன்கு ஆராய்ந்து அவனை நோக்கி, "மன்னர் பெரும, நீர் விஞ்சையர்க்கு உரிய வெள்ளிமலையை ஆளுதற்குரிய சிறந்த புதல்வனைப் பெறுவீர். அவன் திசையெங்கும் தன் இசையைப் பரப்பி வசையின்றி வாழ்வான். இதனை யுணர்த்தும் நன்னிமித்தமாகவே நீர் கண்ட கனவு அமைந்துள்ளது," எனக் கூறினர். இதைக்கேட்ட உதயணனும், வாசவதத்தையும் இல்லறத்தின் சிறந்த பயனாகிய மக்கட் பேற்றினைத் தாம் எய்தப் போவதை யுணர்ந்து மகிழ்ச்சியுற்றனர்.

**வாசவதத்தையின் கனவு :**

நாட்கள் சில கழிந்தன. வாசவதத்தை கருவுற்றாள். உதயணனன் மிக்க மகிழ்வுற்றவனாய் அவளைக் கருவிழியைக் காக்கின்ற கண்ணிமை போலக் காத்து வந்தான். ஒருநாள் இரவில் அயர்ந்து உறங்கி அம்மங்கை கனவு ஒன்றைக் கண்டாள். வெண்முகிலை நிகர்த்த வெண்ணிறக் களிறு ஒன்று, விண்ணிலிருந்து மண்ணிலிறங்கித் தன் வலிமை மிக்க துதிக்கையைச் சுருட்டிக் கொண்டு, அவளது வாயின் வழியாகப்

புகுந்து வயிற்றில் அடங்கியது. அந்நேரத்தில் வானத்திலிருந்து துந்துபிகள் முழங்கும் ஓசையையும், விண்ணவர் பலர் பண்ணமைந்த பாடல்கள் பாடுகின்ற ஒலியையும் கேட்டாள். அவள் தன் வாயிற் புகுந்த வெண்கரியை உடனே உமிழ்ந்தாள். அக் களிறு இறக்கைகளைப் பெற்று வானிற் பறந்து சென்று, ஓங்கி உயர்ந்த வெள்ளி மலையின் மீது ஏறி, அங்கே ஒளி வீசி இலங்கிய கதிரவனை விழுங்கக் கண்டாள். இந்நிலையில் வாசவதத்தை தன் உறக்கம் கலைந்து திடுகிட்டு எழுந்தாள்.

**தத்தையின் விருப்பம் :**

தத்தை, தான் கண்ட வியப்பிற்குரிய கனவைத் தன் கணவனிடம் கூறினாள். அதைக் கேட்ட உதயணன் மிக மகிழ்ந்து, "சிறந்த அணி கலன்களை அணிந்தவளே, வலிமையில் சிறந்து விளங்கும்படியான குற்றமற்ற மைந்தனை நீ பெறுவாய். அவன் மிக்க வலிமை பொருந்திய வித்தியாதரன் ஒருவனோடு பகை கொண்டு போர் செய்து, அவனை வென்று, வித்தியாதரர் உலகைத் தன் ஆளுகைக்கு உட்படுத்துவான். உனது கனவின் பயன் இதுவே,' வென மொழிந்தான்.

**"நாளென ஒன்று போற் காட்டி உயிர் ஈறும் வாள்"** என வள்ளுவப் பெருந்தகையார் புகன்றவாறு நாட்கள் ஒன்றன் பின் ஒன்றாக விரைந்து கழிந்தன. தத்தையின் கருவும் நாளுக்கு நாள் முதிர்ச்சியுற்று வந்தது. அந்நிலையில் அவளது உள்ளம் பெரியமலைகளையும், சிறந்த நதிகளையும், காண்பதற்கும், வானத்திற் பறந்து சென்று அமராவதி முதலிய விண்ணவர் நகரங்களைக் கண்டு களித்தற்கும் விரும்பியது. ஆயினும் அவள் தனது உள்

ளம் செய்வதற்கு அரியசெயலைச் சிந்திக்கின்றது என்ற காரணத்தால், அதனை எவரிடமும் சொல்லாது விடுத்தாள். நாளுக்கு நாள் நங்கையின் உடல் மெலிந்தது. உதயணன் அவள் மெலிவைக் கவனித்து, 'நீ விரும்புவது யாது?' என வினவினன். அந்நிலையிலும் தத்தை தனது விருப்பம், செய்தற்கரிய செயலாக இருந்தமையால், அதனைக் கூறுதற்கு நாணி, ஒன்றும் உரையாது இருந்தனள். மன்னன் வாளாவிருந்த மங்கையை நோக்கி, "நீ விரும்பிய பொருள் யாதெனமொழிக. அது எத்தகையதாயினும் யான் கொணர்வேன். உன் உள்ளத்தை உறுத்துகின்ற பெருநோயை விரைவில் போக்குவேன், அச்சத்தை யொழித்திடுக," எனச் சூள் உரைப்ப, அதனைக் கேட்ட தத்தை, உயிரினும் இனிய தன் கொழுநனை நோக்கி, "குன்றாத முயற்சியையுடைய குணக்குன்றே, வித்தியதரர்களைப் போன்று விண்ணிற் பறந்து சென்று, இம் மண்ணுலகின் மாண்பையும், விண்ணுலகின் எழிலையும் கண்டு களிக்க என் உள்ளம் பெரிதும் விழைகின்றது. செய்வதற்கு இயலாத இச்செயலை விரும்புதல் மக்கள் நகைப்பிற்கு இடமளிக்குமே யென்ற எண்ணத்தால் இந்நாள் வரை அதனைக் கூறாது இருந்தேன்," எனக் கூறினாள்.

அதனைக் கேட்ட மன்னன், தன் மனைவியைத் தேற்றி, "என் இன்னுயிரனையாய்! இச்செயல் எனக்கு மிகவும் எளிது. உனது விருப்பத்தை விரைவில் நிறைவேற்றுவேன்," எனக்

கூறி, அவளை நீங்கிச் சென்றான். துன்பத்தை நீக்கித் துணைபுரியும் அமைச்சர்களோடு, தன் தேவியின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு உரிய வழிவகைகளை ஆராய்ந்தான்.

**உருமண்ணுவா உரைத்தவை :**

அங்கிலையில் உருமண்ணுவா, மன்னனை நோக்கி. "வெற்றி மிக்க தானைகளையுடைய வேந்தர் பெரும! நும் தேவியாரின் குறையைப் போக்கும் முறையை யான் அறிவேன். யான் கூறுவதைக் கேட்பீராக ; சில ஆண்டுகளுக்கு முன்பு ஒருமுறை நாம் வீரர் சிலரோடு கானகம் சென்று, கொடிய விலங்குகளை வேட்டையாடிக் கொன்று,பின்னர் நீர் வேட்கை யுற்று வருந்தி, ஒரு புரச மரத்தின் நிழலில் களைப் புற்றுத் தங்கியபோது ஓர் இயக்கன் நம் முன் தோன்றினன். அவன் வெண்மையான ஆடையை உடுத்தி, மெல்லிய மேற்போர்வையை அணிந்து, அழகிய கச்சினை இடையில் கட்டி: மணமிக்க சந்தனத்தை மார்பில் பூசி, குற்றமற்ற அழகினையுடையவனாய் விளங்கினான். மேலும், அவன் பிறைமதி போன்று விளங்கும் ஏகாவலி யென்னும் அணிகலனைத் தனது கழுத்தில் அணிந்திருந்தான். நீலமணி போன்று ஒளிவீசிய சிகையில் சிறந்த செங்கழுநீர்ப் பூவாலாகிய மாலையை அணிந்திருந்தான். ஆயிரம் இதழ் களைக் கொண்ட தாமரை மலர் போன்ற கண் களைப் பெற்றிருந்தான். அவன் நீர் கிடைக்காது வருந்திய நம் நிலைமையைக் கண்டு மனம் இரங்கி நம்மை நோக்கி, "நீங்கள் யார்? உங்களுக்கு

நேர்ந்த இடையூறு யாது? ஏன் மிகவும் களைப் புற்றவர்களாய்க் காணப்படுகின்றீர்கள்?'' என வினவினான். நாம் நமது துயரத்தின் காரணத்தை உரைக்க, அவன் உடனே விரைந்து சென்று, நன்னீர் கொணர்ந்து நம் நீர் வேட்கையைப் போக்கினன். அவனது அருள்மிக்க செயலை நினைத்து வியந்த நாம் அவனிடம், "எமக்குப் பெருந்துன்பம் நேருமாயின் உம்மை நினைக்கின்றோம். எம்மையெல்லாம் காக்கும் பொறுப்பு நும்மைச் சேர்ந்தது, நீவிர் யார் என அறிய விரும்புகிறோம்,'' என்று கூறினோம் அல்லவா? அவ்வியக்கன் அந்நிலையில் நம்மை நோக்கி, "நான் குபேரனுக்குத் தொண்டு புரியும் இயக்கர்களுள் ஒருவன். எனது பெயர் நஞ்சுகன் என்பதாகும். என்னை மறவாது நினைக்கின்ற மக்களுக்கு நான் உற்ற துணைவனாக உதவி புரிவேன். நீங்கள் எவ்வமயம் நினைப்பினும், அவ்வமயமே வந்து விரும்பிய செயலை முடித்துத் தருவேன். என்னை நினைப்பதற்கு உரிய மந்திர மொழிகள் இவை,'' எனக் கூறி, சில மொழிகளைக் கூறி விட்டுச் சென்றான். மன்னர் பெருமானாகிய நீர் பல அலுவல்கள் காரணமாக அந்நிகழ்ச்சியை மறப்பினும் யான் அதனை மறந்திலேன். அம்மந்திர மொழிகளின் துணைகொண்டு, தொல்லையை நீக்கித் துணைபுரியவல்ல அந்நல்லோனை அழைத்தால், அவன் விரைவில் வந்து அல்லல்கள் அனைத்தும் இல்லையெனக் கூறும்படி செய்வான்,'' என்று கூறினான். அவ்வியக்கனது தோற்றத்தை,

''இசைந்த வெண்டுகில் ஏற்ற தானையன்,
கைந்நுண் மீக்கோள் கச்சியோடு அணவர
அந்நுண் சந்தம் எழுதிய ஆகத்தன்
காசுகண் ணதிர்ந்து கதிர்ஒளி சுடரும்
மாசில் வனப்பினன் மறுதித் தேய்வன
ஏக ஆரம் இலங்கு கழுத்தினன்,
நிழல்படு வனப்பின் நீலத் தன்ன
குழல்படு குஞ்சியுள் கோலம் ஆக
ஒண்செங் கழுநீர்த் தெரியல் அடைச்சித்
தண்செங்கழுநீர்த் தகைமலர்த் தாரினன்,
ஆயிரம் நிறைந்த அணிமலர்த் தாமரைச்
சேயொளி புரையும் திகழ்ஒளிக் கண்ணினன்
கழைகண் ஆகியோர் இளையவன் தோன்றி,''

*என்னும் பெருங்கதை யடிகள் விளக்கு கின்றன.*

(அரும் பொருள்:— *மீக்கோள்—போர்வை; அணவர—பொருத்த: சாந்தம்—சந்தனம்: ஆகம்—மார்பு; காசு கண்ணரிந்து—குற்றத்தை விலக்கி; மறுமதி—களங்கம் பொருந்திய சந்திரன்; ஏகஆரம்—ஏகாவலியென்னும் மாலை; வனப்பு—அழகு; குழல்—கூந்தல்; குஞ்சி—ஆடவர் தலைமயிர் (சிகை); சேயொளி—செம்மை+ஒளி—செந்நிறமான ஒளி; கழைகண்—பற்றுக்கோடு*)

இடுககண் வருதல் :

*உருமண்ணுவா உரைத்தவற்றைக் கேட்ட உதயணன், உற்ற நேரத்தில் உறுதுணை புரிந்த தன் அமைச்சனது அறிவாற்றலைப் புகழ்ந்து, பின்னர் அவன் கூறிய மந்திர மொழிகளை நினை*

விற்கொண்டு, தூய்மையான தனியிடத்தில் இருந்து அவ்வியக்கனைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தபோது, அன்போடு தன்னை நினைக்கும் மக்களுக்கு வயப்பட்டு ஒழுகும் அவ்வியக்கனும், உதயணன் தன் கண்களால் காணுமாறு எழில் மிக்க வடிவத்தை உடையவனாய் அவன் எதிரில் நின்றனன். அவனைக் கண்ட உதயணன் மிக மகிழ்ந்து உளமார் உவகையொடு வரவேற்று. உபசாரங்கள் பல புரிந்தான்.

மன்னது விருந்தோம்பும் சிறந்த பண்பைக் கண்டு மனமகிழ்ந்த இயக்கன் அவனை நோக்கி, "மாண்பு மிக்க மன்னா, மாய யானையைப் பிடித்தற் பொருட்டுச் சென்று சிறைப்பட்ட காலத்திலும், வாசவதத்தையோடு பத்திராபதி என்ற யானை மீது ஏறி அதனை விரைந்து செலுத்திக் கொண்டு வந்தபோது கானகத்தின் நடுவில் கூட்டில் சிக்கிய புலிபோன்று, வேடர் கூட்டத்திற்கு இடையில் சிக்கிக்கொண்ட நேரத்திலும், வாசவதத்தையைப் பிரிந்து சென்று மகத நாட்டில் துயருற்ற காலத்திலும், உனக்குப் பகைவனாகிய ஆருணியென்பவனை வென்ற காலத்திலும் என்னை நினையாத நீ, இன்று என்னை நினைத்தது எக்காரணம் பற்றி?" யென வினவினான். அதைக் கேட்ட உதயணன் அவ்வியக்கனை நோக்கி, "பகைவரை வெல்லும்படியான வேற்படையை உடையவனே, முன்னர் நேர்ந்த அவ்விடையூறுகள் யாவும் எம்மால் தீர்த்தற்கு இயன்றவையாதலின் உன்னை நினைக்கவில்லை எம்மால் செய்வதற்கு எளிய சிறிய செயல்களை

நிறைவேற்றுதற்குப் பிறர் துணையை நாடி நிற்பது எம்முடைய பண்பன்று. இப்போது என் இல்லாள் வாசவதத்தை விரும்பிய செயல் எம்மால் செய்வதற்கு அரியதாகலின், அதனை முடிக்கும் வகையைப் பற்றி ஆராய உன்னை யழைத்தோம். கருவுற்று இலங்கும் அக்காரிகை வான வெளியிற் பறந்து சென்று, இவ்வையகத்தின் எழிலையும், விண்ணகத்தின் சிறப்பையும் காண விரும்புகின்றாள். அவள் விரும்புகின்ற அச் செயலை எவ்வாறு முடிப்பது என அறியாமல், துயருறுகின்ற இந்நேரத்தில் துணை புரியும் ஆற்றல் மிக்க நண்பனாகிய உன்னை நினைத்தோம்" எனக் கூறினான்.

## இயக்கன் கூறிய பத்திராபதியின் வரலாறு :

உதயணன உரைத்தவற்றைக் கேட்ட இயக்கன் அவனிடம், "மாலையை யணிந்த மார்பினை யுடையவனே, உன் இல்லாள், மக்களால் செய்ய இயலாத இச்செயலை விரும்புவதற்கு உரிய காரணத்தைக் கேட்பாயாக: உன் மனைவியின் வயிற்றில் உறைபவன் வித்தியாதரர் உலகை ஆளுதற்கேற்ற சிறப்பினையுடையவன். விண்ணிற் பறந்து செல்லும் பழக்கத்தையுடைய வித்தியாதரரைச் சேர்ந்தவனாதலின் அவன் தாயின் கருவில் இருக்கும்போதே பறந்து சென்று இப்பாரின் எழிலைப்பார்க்க விரும்பினான். அவ்விருப்பத்தின் காரணமாகவே உன் இல்லாளும் விண்ணிற் செல்ல விரும்புகின்றாள் பெருமையிற் சிறந்த அந்நல்லோன் உனக்கு மைந்தனாகப் பிறப்பதற்கு உரிய காரணத்தைக் கூறுவேன்.

மேகக் கூட்டங்கள் தவழும் விந்திய மலைக்கு அண்மையில் நருமதை யாற்றின் கரையில் அமைந்துள்ள பருப்பதம் என்னும் பெயரினை யுடைய மலையில் குபேரன் தங்கியிருந்து இன்புற்ற போது, பத்திராபதி யென்னும் தெய்வப் பெண் ஒருத்தியை மலர்கொய்து வரும்படி ஏவினான். அம்மங்கையும், மலர் வனம் புகுந்து, மணமிக்க மலர்கள் பலவற்றைப்பறித்துக் கொண்டு திரும்பிய நேரத்தில், ஓர் அழகிய காட்சி அவள் உள்ளத்தை ஈர்த்தது. திரண்ட துதிக்கையையும், நீண்ட தந்தங்களையும் உடைய ஆண் யானை யொன்று தன் பிடியொடு விளையாடுகின்ற காட்சியைக் கண்ட பத்திராபதி, தனது கடமையை மறந்தவளாய்ச் சிந்தனைக் கடலில் ஆழ்ந்து, யானைப் பிறவியும் எய்துதற்குரியதே என எண்ணித் தன்னை மறந்து நின்றாள். சிறிது நேரம் கழித்துக் காலம் நீட்டித்தமையறிந்து, குபேரன் சினப்பானோ என அஞ்சியவளாய் விரைந்து சென்றாள். அவளது எண்ணத்தை உணர்ந்த குபேரன், "நீ யானைப் பிறப்பை விரும்பினையாகலின், தெய்வமகளாக வாழ்வதற்குத் தகுதியற்றவளானாய். நீ ஒரு பெண் யானையாகப்பிறந்து மண்ணுலகில் வாழ்ந்திடுக!" எனச் சபித்தான். அந்நிலையில் பத்திராபதி பெருநிதிக்குத் தலைவனாகிய குபேரனது பாதங்களில் வீழ்ந்து, "ஐயனே! யான் செய்த பிழையைப் பொறுத்தருள்க! எனது பெண் யானைப் பிறவி எந்நாளில் நீங்கும்?" என வினவினாள். குபேரன் அவளை நோக்கி. "நீ பிரச்சோதனன்

என்னும் மன்னனுடைய நகரில் பெண் யானை யாகப் பிறந்து, பத்திராபதி யென்னும் இப்பெய ரினையே பெற்று வாழ்ந்து வருவாய். அந்நாளில் உலகத்தார் கொண்டாடும் உயரிய பண்புகள் வாய்ந்த உதயணன் என்னும் அரசிளங்குமரன் அம்மன்னனால் சிறை பிடிக்கப்பட்டு அந்நகர் அடைவான். மன்னன் பிரச்சோதனன் உன்னை அவ்விளைஞனுக்கு அளிப்பான். அவன் பிரச் சோதனன் மகளாகிய வாசவதத்தையை உன் மீது ஏற்றிக்கொண்டு, இருள் நிறைந்த காட்டுப் பாதையில் உன்னை விரைந்து செலுத்தும்போது நீ காலகூடம் என்னும் கொடிய நோயால் துன் புற்றுப் பெரும்பசியால் வாட்டமுற்று மண்ணில் வீழ்ந்து மயங்குவாய். அந்நிலையில் உதயணன் உன் செவியில் அச்சத்தை விலக்கும் ஐந்தெழுத் தாகிய பஞ்சமந்திரத்தைக் கூறுவான். அவற் றைக் கேட்டதும் நீ உன் பழம்பிறப்பினை யுணர்ந்து பிறப்பை யொழித்து, இப்பேருலகை அடைவாய்,'' எனக் கூறினன்.

குபேரன் குறித்த அப்பெண்மகள், பத்திரா பதி யென்னும் பெண் யானையாகப்பிறந்து, உதய ணனுக்கு ஊர்தியாக விளங்கி, காட்டினிடையே மயங்கி வீழ்ந்து, பின்னர் ஐந்தெழுத்து மந் திரத்தை அவன் உரைக்கத் தன் பிறப்பை யொழித்து விண்ணகம் சென்றனள். அவள் தனது பழம்பிறப்பை யுறுத்தற்குத் துணைபுரிந்த உதயணனுக்கு நன்மை புரிய நினைத்தாள். தன் தலைவனாகிய குபேரனையடைந்து, அவனை வணங்கி, "எல்லையற்ற செல்வத்திற்கு இறை

வனே! யான் உம்மிடம் வேண்டுகின்ற சிறிய வரத்தை மறுக்காது அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். உதயணன் என்ற உயர்ந் தோன், யான் யானையின் உருவில் காலகூட நோயால் துன்புற்றுக் கானகத்தில் வீழ்ந்த போது, என்னிலைக்கு மிகவும் இரங்கி, கண் களில் நீர் சிந்துமாறு வருந்தி, என்னைத் தனது கரங்களால் தழுவி, என்னுடைய செவியில் ஐந் தெழுத்து மந்திரத்தைக் கூறினன். அவனது அருள்மிக்க செயலின் காரணமாகவே யான் எனது பண்டைய உருவைப் பெற முடிந்தது. என் துயரைத் துடைத்த அவ்வண்ணல் குற்ற மற்ற சிறப்பினை யுடைய மைந்தனைப் பெறுமாறு அருளுதல் வேண்டும்,'' என வேண்டினள். அத னைக்கேட்ட குபேரன் அவள் வேண்டுகோட்கு இணங்கி, அவ்வரத்தை அவளுக்கு அளித்தனன்.

பின்னர் அக்குபேரன் விண்ணுலகில் உறை யும் இந்திரனை யடைந்து அவனிடம் உதயணனது சிறப்பை உரைத்து, 'அவன் மகிழத்தக்க மைந் தன் ஒருவனை யளித்தல் வேண்டும்,' என வேண் டினன். குபேரனுடைய சொற்களைக் கேட்ட இந்திரன், வெள்ளிப் பெருமலையில் வேந்தனாக இருந்து இம்மண்ணுலகை ஆள வேண்டுமென் னும் மன விருப்பொடு தவம் புரிந்து கொண் டிருந்த சோதவன் என்னும் முனிவனை யழைத்த னன். அவனிடம் "நீ வத்தவ நாட்டிற்கு மன்ன னாகிய உதயணனுடைய மனைக்கிழத்தி வாச வதத்தையின் வயிற்றில் கருவுற்றுப் பிறந்து வெள்ளி மலையை யாளும் சிறப்பினைபெறுக,"

என்று கூறினன். அவனது கட்டளைப்படியே சோதவன் தத்தையின் கருவில் வந்து தங்கினன்,'' என்று பத்திராபதியின் வரலாற்றையும், அவள் உதயணனுக்குச் செய்த உதவியையும் உரைத்த இயக்கன் மீண்டும் மன்னன் உதயணனை நோக்கி, "மன்னனே, பத்திராபதி யென்னும் அம்மங்கை நல்லாள், மேலும் உனக்குப் பலநன்மைகளைப் புரியவேண்டுமென்ற நன்னேக்கத்தோடு இருக்கின்ருள். ஆகையால், நீ நினைத்த நேரத்தில் அவள் உன் முன் தோன்றி, நீ விரும்பிய செயலை முடித்துத் தருவாள். அங்ஙனம் அவள் செய்யாவிடில், யான் மீண்டும் வந்து உன் குறையைத் தீர்ப்பேன்,'' எனக் கூறி, பத்திராபதியை அழைத்தற்கு உரிய மந்திரமொன்றை மன்னனுக்குக் கற்பித்துவிட்டுச் சென்ருன்.

## பத்திராபதி வருகை :

இயக்கன் சென்றபின்னர், உதயணன் பத்திராபதியை நினைத்து இவ்வியக்கன் கூறிய மந்திரங்களை ஓதிக் கொண்டிருந்தனன். இதற்கிடையில் மன்னன் தன் மனைவியின் மனக்கருத்து விரைவில் நிறைவேருவிடில், அவள் மிகவும் வருந்துவாள் என எண்ணித் தன் அமைச்சர்களை அழைத்து, அவர்களோடு தன் மனைவியின் விருப்பத்தை விரைவில் முடித்தற்குரிய முறைகளைப் பற்றி ஆராய்ந்தான். அவ்வமயம் அமைச்சர் பெருமக்கள் தம் மன்னனிடம் ' அரசரேறே, முயற்சி யுடையார்க்கு முடியாத செயல் ஒன்றுமில்லை. அதலின் நீங்கள் வருந்துதல் வேண்டா. சிற்பத் தொழிலில் சிறந்த தச்சர்களை அழைத்து.

அரசியார் வானிற் பறந்து செல்லுதற்குத் துணை புரியும் பொறியூர்தி யொன்றை அமைப்போம்.," எனக் கூறினர். அமைச்சர்கள் கூறியவற்றைக் கேட்ட மன்னனும் மிக மகிழ்ந்து, நாட்டின் பல பாகங்களிலிருந்து சிற்பத் தொழிலில் தேர்ச்சி பெற்ற தச்சர் பலரை வரவழைத்தான். அவர்களிடம் வானத்திற் பறந்து செல்லத்தக்க வான ஊர்தி யொன்று அமைத்துத் தரவேண்டும் எனத் தன் எண்ணத்தைத் தெரிவித்தான்.

உதயணன் உரைத்தவற்றைக் கேட்ட தச்சர்கள், வானவூர்தியை யமைக்கும் வகையை யுணராதவராய் அவனை நோக்கி, "அரசரே, நாங்கள் நீரில் மிதந்து விரைந்து செல்லக்கூடிய மரக்கலங்கள், தோணிகள் போன்ற நீர் ஊர்திகளையும், நிலத்தில் செல்லக்கூடிய தேர், வண்டி முதலிய நிலவூர்திகளையும் செய்யும் திறமை பெற்றிருக்கிறோம். ஆயின், நீங்கள் விரும்பும் வான வெளியிற் செல்லத்தக்க பொறியூர்த்தி யமைக்கும் நெறியை அறியப் பெற்றிலோம். ஆதலின் அச்செயல் எம்மால் செய்வதற்கு அரியது. உங்கள் ஆணையை நிறைவேற்ற முடியாமைக்குப் பெரிதும் வருந்துகிறோம். பொருத்தருள்வீராக!" என மொழிந்தனர். அமைச்சர்கள் கூறியவற்றைக் கேட்டு அகமகிழ்ந்த மன்னன், தச்சர்கள் உரையைக் கேட்டு மனம் தளர்ந்தான். தன் ஆருயிர் மனையாளின் ஆவல் நிறைவேற்றப் படாது, அவள் வருந்தும்படி நேரிடுமோ எனக் கவன்றான்.

அவ்வாறு உதயணன் உற்ற துன்பத்தை உணர்ந்த பத்திராபதி, அவனது மனக்கவலையை

மாற்ற எண்ணியவளாய், ஓர் இளமை பொருந்திய தச்சன் உருவத்தைக் கொண்டு, மன்னனை அடைந்தாள். அவனிடம், "மன்னர் பெரும, நும் மனத்துயரை மறந்திடுக. வானவூர்தியைச் செய்யும் முறையறியாத இத்தச்சர்களைக் கைவிடுக! யான் நும் இல்லாளின் விருப்பத்தை முடித்தற்குரிய வானவூர்தியை யமைத்துத் தருவேன்," எனப் புகன்றாள். மன்னன் இளமையெழிலுடன் இலங்கிய அத்தச்சனது உறுதி வாய்ந்த மொழிகளைக் கேட்டு, மகிழ்ச்சியுற்றவனாய், அப்பொறியை அமைத்தற்குரிய பொருள்கள் அனைத்தும் ஈந்து, விரைவில் முடித்துத் தருமாறு வேண்டினான். தச்ச உருக்கொண்டு வந்த பத்திராபதி, உதயணன்பாற் பெற்ற பொருள்களைக் கொண்டு சென்று. பிறர் அறியாத தனியிடத்தில் இருந்து, சில நாட்களில் சிறந்த வானவூர்தி ஒன்றை முடித்து, அச்செய்தியை அரசனிடம் அறிவித்தாள்.

**உதயணனும் மற்றையோரும்**
**வானவூர்தியில் ஏறிச் செல்லுதல்:**

மன்னன் உதயணனும் மதியமைச்சர் நால்வரும் சென்று, அவ்வானவூர்தியைக் கண்டு, அதன் அமைப்பையும், சிறப்பையும் அதனைச் செம்மையுற அமைத்த தச்சனின் கைத்திறனையும் புகழ்ந்து வியந்தனர். பின்னர் ஒரு நன்னாளில் உதயணன் வாசவதத்தையை அழைத்துக் கொண்டு சென்று, உமையவளோடு வீற்றிருக்கும் முக்கட்கடவுளர் போன்று அவ்வூர்

தியில் அமர்ந்தனன். அவ்வமயம் உரு மண்ணுவா முதலிய அமைச்சர்கள் மன்னனை அணுகி. தம்முடைய மனைவியரும் அவ்வூர்தியின்மீது ஏறி வானிற் பறந்து செல்ல வேண்டும் என்ற பேராவல் உடையவராய் இருக்கின்றனர் என்பதை உணர்ந்த மன்னன் அமைச்சர்களோடு அவர்தம் மனைவியரையும் ஊர்தியில் ஏற்றிகொள்ள விரும்பினான். எனவே அவன் பத்திராபதியை நோக்கி "இவ்வூர்தியின் அச்சு எம்மை யெல்லாம் தாங்கும் தன்மையதோ?" என்று வினவ பத்திராபதியும் "மக்கள் பலரும் மகிழ்ந்து கொண்டாடும் மன்னரே, உலகமெல்லாம் ஒருங்கு ஏறினும் இவ்வூர்தியின் அச்சு தாங்கும் தன்மையது. அதைக் குறித்து அஞ்சற்க!" எனக் கூறினாள். உருமண்ணுவாவும், ஏனைய அமைச்சர்களும் மிக மகிழ்ந்து, தம் மனைவியருடன் அவ்வூர்தியில் அமர்ந்தார்கள்.

**ஊர்தியில் அமர்ந்து உதயணனும்**
**மற்றையோரும் கண்ட காட்சிகள் :**

யாவரும் அமர்ந்த பின்னர் அவ்வானவூர்தியில் அமைந்திருந்த உறுப்புக்கள் யாவற்றையும் பத்திராபதி அவர்களுக்கு விளக்கிக் காட்டி, பின்னர் அதன் விசையைத் திருகி, வான வெளியில் விரைந்து செலுத்தினாள். அவ்வூர்தியானது மேகக் கூட்டங்களைக் கிழித்துக் கொண்டு, வானுற ஓங்கிய மலைகளின் சிகரத்திற்கு அப்பால் காற்றிலும் கடுகிச்சென்றது. ஊர்தியில் இருந்தவர் ஓங்கி வளர்ந்துள்ள இமயமலையின் சிகரங்கள், மேன்மை பொருந்திய மேருமலை,

கங்கை, சிந்து முதலிய யாறுகள், எழில் மிக்க மலர்களைக் கொண்ட வளமிக்க பொய்கைகள், விதேயம், அவந்தி முதலிய நாடுகள், தவநெறியை மேற்கொண்டோர் உறையும் தண்டகாரணியம், மயிலினங்கள் மகிழ்ந்துறையும் பொதிகைமலை, அம்மலைமீது விளங்கும் குளிர்ச்சி பொருந்திய சந்தன மரச்சோலைகள், அச்சோலைகளின் நடுவில் அழகுற விளங்கும் பொய்கைகள், தென் திசையில் விளங்கும் இலங்கை, குமரித் துறை முதலிய பற்பல இடங்களைப் பத்திராபதி காட்டக் கண்டு மகிழ்ந்தனர்; மேலும் விண்ணவரும் வித்தியாதரரும் உறையும் வானுலக நகரங்களின் வளத்தையும் கண்டு வியந்தனர். வாசவதத்தை தனது விருப்பம் நிறைவேற்றப் பெற்று கழி மகிழ்வெய்தினாள். முன்னர் விந்தை மிக்க பல இடங்களைக் காண்பித்து, உதயணன் முதலியோரது சிந்தையை மகிழ்வித்த பத்திராபதி, ஊர்தியை மீண்டும் கௌசாம்பி நகரத்திற்குக் கொண்டு வந்து இறக்கினள்.

**உதயணன் பத்திராபதியைப் புகழ்தல் :**

நகரை அடைந்த மன்னன் உதயணன், பத்திராபதிக்குப் பல சிறப்புக்களைச் செய்தான், பொன்னிற ஒளியை இம்மண்ணிடைப் பரப்பி, மக்களையும் மற்றைய உயிரினங்களையும் மகிழ்விக்கும் கதிரவன் அமரும் தேர் போன்ற வியப்பிற்குரிய ஊர்தியைச் சிறப்புற அமைத்த பத்திராபதியை நோக்கி, "செய்தற்கரிய செயல் புரியும் சிற்பியே! நீ எமது எல்லையில்லாத பெருந்துயரை அகற்றினாய். சிற்பிகள் பலர் செய்வ

தற்கு இயலாதது எனக் கைவிட்ட அரிய வான ஊர்தியை, இளைஞனுகிய நீ அணிபெற அமைத்தாய்! நின் கைத்திறத்தின் சிறப்பு என்னே! மிகச் சிறந்த செயலைச் செய்த உனக்கு விரைந்து செல்லும் தன்மை வாய்ந்த குதிரைகளோடு, பசும் பொன்னால் அமைந்த நெற்றிப் பட்டத்தைக் கொண்ட யானைகளையும், பொற் குவியல்களையும் கொடுத்தாலும், விண்ணிற் சிறந்து விளங்கும் பொன் நகரமாகிய அமராவதியைப் பரிசிலாகக் கொடுத்தாலும், உனது உதவியின் ஒரு சிறு கூறுக்கு ஒப்பாகாது. வானத்திற் பறந்து செல்ல விரும்பிய தத்தையின் ஆவலை நிறைவேற்றுதற்கு யாது செய்வது என்று யான் கலங்கிய நேரத்தில் கடவுளைப் போலத் தோன்றி எம் கடுந்துயர் ஒழித்தாய். இதற்கு யான் உனக்கு என்றும் கடமைப்பட்டவனுவேன்,'' என்று உதயணன் அன்பு கலந்த அமுதத்தை நிகர்த்த சொற்களைக் கூறித் தான் அணிந்திருந்த அணிகலன்களை யெல்லாம் கழற்றிக் கொடுக்கத் தொடங்கினன். மன்னன் உதயணன் பத்திராபதியைப் புகழ்ந்துரைத்தமையை,

''எல்லையில் பெருந்துயர் எய்தினம் அகற்றினை
அரசின் ஆகாது ஆணையின் ஆகாது
விரைசெலல் இவுளியொடு வெங்கண் வேழம்
பசும்பொன் ஓடைப் பண்ணெடு கொடுப்பினும்
விசும்பிடைத் திரிதரும் வேட்கை வெந்நோய்
பொன்னிறை உலகம் பொருளொடு கொடுப்பினும்
துன்னுபு மற்றது துடைக்குநர் இன்மையின்
உறுகண் தீர்த்தோய்க்கு உதவியொன் ருற்றிப்

பெருகுவம் யாம்எனப் பெயர்ப்பதை அறியோம்
நல்வினை யுடைமையிற் றெல்வினை தொடர்ந்த
எந்திரந்தந்து கடவுளை யொத்தி யென்று
அன்புகலந் தொழுகும் அறிவிற் பின்னி
அருள் உரை அளைஇ.''

*என்னும் பெருங்கதை அடிகள் அறிவிக்கின்றன.*

(அரும் பொருள் :-*இவுளி — குதிரை; வேழம்—யானை; ஓடை—நெற்றிப்பட்டம்; வேட்கை—ஆவல்; துன்னுபு—நெருங்கி; உறுகண்—துன்பம்; தொல்வினை — பழமையான வினைப்பயன்; அளைஇ — கலந்து.*)

## பத்திராபதி தன் வரலாறு கூறுதல் :

*உதயணன் தன் அணிகலன்களைத் தனக்கு அளித்தபோது பத்திராபதி அவற்றை ஏற்றுக் கொள்ளாது அவனை நோக்கி, ''மாண்பு மிக்க மன்னரே! யான் உமது பொருளை விரும்பி இச்செயலை முடிக்கவில்லை. என் வரலாற்றைக் கேட்பீராக'' எனக் கூறத் தொடங்கித் தான் பண்டைப் பிறவியிற் பெண் யானையின் உருக் கொண்டு வாழ்ந்ததையும், உதயணனுக்கு ஊர்தியாகிக் கானகத்தின் நடுவில் காலகூடம் என்னும் பெரு நோயால் தொடரப் பட்டுத் துன்புற்ற விதத்தையும், அங்நிலையில் அவன் ஐந்தெழுத்து மந்திரத்தைத் தன் செவிகளிற் கூறப் பிறவியை யொழித்துப் பழைய உருவைப் பெற்ற தன்மையையும் உரைத்தாள். பின்னரும் அவள் மன்னனை நோக்கி, ''நீர் செய்த பேருதவிக்கு, யான் செய்த இவ்வுதவி எவ்வாற்றானும் ஒப்பாகாது.*

நீரும் யானும் வேறு என எண்ணவேண்டா். நம்முடைய நட்பு எந்நாளும் அழியாது." எனக் கூறித் தான் மேற்கொண்ட சிற்பியின் வடிவத்தை மாற்றித் தன் தெய்வ உருவத்தைக் கொண்டு நின்ருன். பத்திராபதியின் தெய்வ உருவைக் கண்ட உதயணனும் மற்றையோரும் வணங்க, அவர்கள் பால் விடை பெற்றுக் கொண்டு அவள் தன்னிருப்பிடம் நோக்கிச் சென்ருள்.

**நரவாணதத்தன் பிறப்பு :**

சில மாதங்களுக்குப் பின்னர் மங்கை வாசவதத்தை நன்னுள் ஒன்றில், பகை ஒழியவும், பசியும் பிணியும் நீங்கவும். மழைவளமும், விளையுளும் பெருகவும், குற்றமற்ற மொழிகளைக் கொண்ட நல்லோர்கள் வாழும் வெள்ளிமலை விளக்கமுறவும், கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ, புதற்பூ என்னும் ஐவகை மலர்களும் நிறைந்திலங்கவும், தெய்வத்தின் அருள் திசையெங்கும் பரவவும், விண்ணிடத்தும் ஆட்சி செலுத்தக்கூடிய அருஞ் சிறப்பு வாய்ந்த எழில் மிக்க ஆண் குழந்தை யொன்றை ஈன்றெடுத்தாள்.

மன்னன் மனைவி ஆண் மகவு ஒன்றை ஈன்ருள் என்ற செய்தி பரவியதும், வத்தவநாடு முழுமையும் மகிழ்ச்சியில் திளைத்தது. கௌசாம்பி மாநகரம் களிப்புச் கடலில் மிதந்தது. உதயணன் தன் மகன் பிறந்த அப்பெருநாளில் வறியவருக்குப் பொருள்களை வாரி வாரி வழங்கினன்; பெரியோர்களுக்குச் சிறப்பளித்தான்; கடவுளர்

ஆலயமெங்கும் விழாக் கொண்டாடும்படி செய் தான் ; குற்றஞ்சாட்டப்பட்டுச் சிறையில்இருந்த வரை விடுவித்தான் ; பகை மன்னர் திறை செலுத்தும் பழக்கத்தை ஒழித்தான். பாடுந் தொழிலில் வல்ல பாணர்க்கும், ஆடலிற் சிறந்த விறலியர்க்கும், அறிவுத் துறையிற் சிறந்த அறிஞர்க்கும், மற்றும் பலருக்கும் பரிசில்களை வழங்கினான்.

இவ்வாறு மைந்தன் பிறந்து பன்னிரண்டு நாட்கள் வரை மகிழ்ச்சியோடு பல சிறப்புக்களைச் செய்த மன்னன் உதயணன், பன்னிரண்டாம் நாளில் அறிஞர் பெருமக்களை அழைத்து, அம் மைந்தனுக்குப் பெயர் சூட்டு விழாவை நடத்தினான். அவர்கள், "நரவாணன் என்னும் பெயரினைக் கொண்ட குபேரனது பேரருளாற் பிறந்தவனாதலின் **நரவணதத்தன்** என்று இவனை அழைப்பது சாலவும் பொருத்த முடையது," எனப் புகன்று அப்பெயரையே அக்குழவிக்குச் சூட்டி மகிழ்ந்தார்கள். நரவாணதத்தன் என்னும்சொல்லுக்குக் **'குபேரனால் கொடுக்கப்பட்டவன்'** என்பது பொருளாகும்.

வாசவதத்தை நரவாணதத்தனைஈன்றெடுத்த சின்னாட்களுக்குப் பின்னர், உருமண்ணுவா முதலிய அமைச்சர் நால்வருடைய மனைவியரும் ஆண் குழவிகளைப் பெற்றார்கள். உருமண்ணுவாவின் புதல்வனுக்குப் **பூதி** யெனப் பெயரிடப் பட்டது. அவ்வாறே யூகியின் புதல்வனுக்கு **அரிசிகன்** என்றும்,வயந்தகன் புதல்வனுக்குத் **தவந்தகன்** என்றும், இடவகன் புதல்வனுக்குக் **கோமுகன்**. என்றும் பெயர்கள் வழங்கப் பட்டன.

நரவாணதத்தனும், மற்றைய நால்வரும் வளர் பிறை மதி போன்று வளர்ந்து வரும் நாளில் உதயணன் புகழ் நாடெங்கும் பரவியது. மன்னன் உதயணன் மாநிலத்தோர் கொண்டாடும் படி அறநெறி வழுவாது, 'மன்னன் உயிர்த்தே மலர் தலை யுலகம்,' என்பதனை நன்கு உணர்ந்து, குடி தழுவிக் கோலோச்சும் பண்பினனாய் வாழ்ந்து வந்தான். பகைவரைக் கண்டால் செந்தீ போன்று சிவக்கின்ற அவனுடைய கண்கள், பசியினால் வாடும் இரவலர்களையும், பாடல் பல இசைக்கும் பாவலரையும் காணும்போது, கருணை மழை பொழியும் கார்முகிலென விளங்கின. மாற்றார்க்குப் பணியாத மன்னன், அற நெறியொழுகும் ஆன்றோர்க்குப் பணியும் இயல் பினனாக விளங்கினான். மாற்றார் படைகளைக் கூற்றுக்கு விருந்தாக்கி, நாற்றிசையும் தன் புகழைப் பரப்பிய அவன் தன்னைப் பணிந்து திறை செலுத்திய மன்னர்பால் அருள் புரியும் அண்ணலாக விளங்கினான்.

இவ்வாறு உதயணன் செந்நெறி வழுவாது சிறப்புற ஆண்டுவந்த நாளில் மைந்தன் நரவாணனும், அவன் தோழர்களான பூதி முதலிய நால்வரும் வளமுற வாழ்ந்து இளமைப் பருவத்தைக் கடந்து, பல கலைகளையும் கற்றுணர்ந்து அறிவில் மேம்பட்டவராகவும், போர்த்துறைக் கலைகளான யானை யேற்றம், குதிரை யேற்றம், விற் பயிற்சி, வாட்பயிற்சி, மற்றும் பல படைக்கலப் பயிற்சிகள் யாவற்றையும் செம்மையாக உணர்ந்து சிறந்த வீரர்களாகவும், கண்டோர் வியக்கும் கட்டிளங்காளையராகவும் விளங்கினர்.

**மதனமஞ்சிகை வரலாறு :**

நரவாணதத்தன் நலமுற்று விளங்கிய அந் நாளில் வளங்களிற் சிறந்த அக்கௌசாம்பி நன்னகரில் கலிங்க சேனை என்ற கணிகை யொருத்தி வாழ்ந்து வந்தனள். அவள், ஆடல் பாடல்களில் சிறப்புற்று, அந்நகரில் வாழ்ந்த இரண்டாயிரத்து ஐந்நூறு கணிகையருக்கும் மேம்பட்ட எழிலும், சிறப்பும், கலையறிவும் பொருந்தியவளாய் இருந்தாள். அவளுக்குத் திருமகளை நிகர்த்த அழகிய பெண் ஒருத்தி இருந்தனள். மதனமஞ்சிகை யென்ற பெயரோடு விளங்கிய அவள் கண்டவர் வியக்கும் கலையறிவும், தன்னை யொத்த கன்னியரும் விரும்பத்தக்க கட்டழகும் உடையவளாய் விளங்கினள்.

ஒரு நாள் மாலை நேரத்தில் நரவாணன் ஒரு களிற்றின் மீதமர்ந்து, தன் தோழர்களோடு வீதி வழியே சென்று கொண்டிருந்தபோது, மதனமஞ்சிகை தனது மாளிகையின் மேல் மாடத்தில் தோழியர்களோடு பூப்பந்து விளையாடிக்கொண்டிருந்தாள். அவள் வீசி யெறிந்த பந்து சாரளத்தின் வழியே வந்து கருமுகிற் கூட்டங்களுக்குமேல் தோன்றும் கதிரவனைப் போன்று களிற்றின் மீது வந்த காளையின் மென்மையான துகிலில் விழுந்தது. அதனை தன் கையில் எடுத்துக்கொண்டு, அப்பந்தை எறிந்தவள் யார் என்று அறியக் களிற்றின் மீது இருந்தவாறே அண்ணாந்து பார்த்தான். அப்போது மதனமஞ்சிகை, தான் எறிந்த பந்து

வீதியை யடைந்தமையால், சாரளத்தின் அருகில் வந்து நின்று வீதியை நோக்கினாள்; அங்கு நரவாணதத்தனைக் கண்டாள். அவனும் அவளது எழிலுருவத்தை நோக்கினான். ஆனால் அவன் வாய் திறவாது, அப்பந்தினைத் தன் கையிற் கொண்டு, அருகில் இருந்த அழகிய சோலையிற் சென்று அமர்ந்தான்.

**கோமுகன் மதனமஞ்சிகையின் உருவத்தை வரைதல்:**

மனங்கலங்கி மலர்ச்சோலையில் தங்கிய மன்னன் மகன், தன் ஆருயிர் நண்பனாகிய கோமுகனிடம், "நண்ப இக்கணிகையர் வீதியில் என் மீது இப் பந்தை எறிந்த பாவை யாரென்பதை நீ அறிந்திருப்பின், அவளைப் பற்றிய செய்திகளைக் கூறுக," என வினவினான். நரவாணன் வைத்திருந்த அப்பந்தைக் கோமுகன் தன் கையிற் கொண்டு, அதை உற்று நோக்கினான். அப்பந்தில் மதனமஞ்சிகையின் சந்தனம் பூசப்பெற்ற கை விரல் ரேகைகள் அழுந்தி இருந்தமையால், ரேகை சாத்திரத்திலும், ஓவியக்கலையிலும் வல்லவனாகிய அவன், அவ்விரற் குறிகளைத் துணையாகக் கொண்டு, மங்கை மதனமஞ்சிகையின் உருவத்தை வரையத் தொடங்கினன்.

அவன் பந்திற்படிந்திருந்த சுவடுகளைக் கொண்டு விரல்களையும், அவ்விரல்களுக்கு ஏற்ற உள்ளங்கைகளையும், அவற்றிக்கு ஏற்றவாறு முன் கைகளையும், அம் முன் கைகளோடு தொடர்புகொண்ட தோள்களையும், தோள்

களுக்கு ஏற்றவாறு ஒளிபெற்று விளங்கிய எழில் முகத்தையும், அம்முகத்தில் விளங்காநின்ற மாவடுவினை நிகர்த்த மலர்விழிகளையும், பவளம் போன்ற செந்நிற வாயையும், முத்துக்களை நிகர்த்த பல்வரிசைகளையும் கொண்ட ஒரு பெண்ணின் உருவத்தை எழுதிக்கொணர்ந்து நரவாணனிடம் காட்டி, இத்தகைய வடிவம் பெருந்தியவள், இந்நகரில் வாழும் கலிங்கசேனையென்னும் கணிகையின் மகளான மதனமஞ்சிகை யென்னும் மங்கையே ஆவள்," எனப் புகன்றனன். கோமுகன் சித்திரம் வரைந்த செய்தியை,

"விரலும் விரலிற்கு ஏற்ற அங்கையும்,
அங்கைக்கு ஏற்ற பைந்தொடி முன்கையும்
முன்கைக்(கு) ஏற்ற நன்(கு)அமை தோளும்,
தோளிற்(கு) ஏற்ற வாள்ஒளி முகமும்,
மாப்படு வடுவுறழ் மலர்நெடுங் கண்ணும்
துப்புஅன வாயும், முத்துஒளி முறுவலும்,
ஒழுகுகொடி மூக்கும், எழுதுநுண் புருவமும்,
சேடுஅமை செவியும், சில்லிரும் கூந்தலும்,
மருங்கின் நீளமும், நிறம்கிளர் சேவடித்
தன்மையும் எல்லாம் முன்முறை நூலின்
அளந்தனன் போல வளம்பட எழுதி,"

(அரும் பொருள் : அங்கை – உள்ளங்கை; துப்பு –பவளம்; சேடு - பெருமை; மருங்கு - இடை; சேவடி – சிவந்த பாதங்கள்,)

என்னும் பெருங்கதையடிகள் அறிவிக்கின்றன.

## மதன மஞ்சிகையை மணம் புரிதல் :

பின்னர்க் கோமுகன், மதனமஞ்சிகை எறிந்த பந்தைத் தன் கையிற்கொண்டு, நிறைந்த பொன் ஆபரணங்களை உடன்கொண்டு, அவளது இல்லத்தை யடைந்தான். அங்கு அவளது தாயாராகிய கலிங்க சேனையைக்கண்டு, அவள்பால் நிகழ்ந்ததை உரைத்து, நரவாணதத்தன் மதனமஞ்சிகையை மணக்கவேண்டு மென்னும் அவாவுடையவனாக இருப்பதை உணர்த்தினான். கோமுகன் சொற்களைக் கேட்ட கலிங்க சேனை, 'தெய்வம் வரந் தருகின்றது' என்று களிப்புற்று, அவன் கொணர்ந்த பரிசுகளை ஏற்க உடன் பட்டாள். ஆயினும் அவர்களுடைய உறவினர் கோமுகனிடம், "நரவாணதத்தனுக்கு எம்முடைய மங்கையை கொடுப்பதற்கு எமக்கும் விருப்பமே. இருப்பினும், மன்னன் உதயணனின் மனக்குறிப்பை யறிந்தாலன்றி நாங்கள் இசையோம்." என்று கூறிப் பரிசுகளை மறுத்தனர்.

கணிகையர் கூறியவற்றைக்கேட்ட கோமுகன் உதயணனிடம் சென்று உண்மையை உரைக்க அவனும் வாசவதத்தையும் தம் மைந்தனது விருப்பத்தையறிந்து மகிழ்ந்து, கலிங்கசேனையின் இல்லத்திற்குத் தாங்களே பரிசுப் பொருள்களை அனுப்பினர். மன்னன் மகிழ்ந்து அனுப்பிய பரிசத்தைக் கலிங்க சேனையும், மற்றைய உறவினரும் ஏற்றுக்கொண்டு மணத்திற்கு உடன்பட்டனர், மங்களம் மிக்க நன்னாள் ஒன்றில்,

நரவாணன் மதன மஞ்சிகையை மணம் புரிந்து கொண்டு அவளோடு இன்புற்று வாழ்ந்தனன். பின்னர் அவன் வித்தியாதர நகரத்து மன்னன் **நீலவேகன்** என்பவனுடைய மகளாகிய அநங்க **விலாசனி** என்பவளை மணந்து, வித்தியாதரர் உலகத்தை ஆளும் பெருஞ் சிறப்பையும் பெற்று வாழ்ந்து வரலானான்.

இவ்வரலாறு **பெருங்கதை** என்னும் நூலில் காணப்படுகின்றது. இந்நூல் **கொங்குவேளிர்** என்ற புலவரால் இயற்றப்பட்டதாகும். இது சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றைப் போலத் தொடர்நிலைச் செய்யுளாக விளங்குகின்றது. ஒரு கதையைப் பல அழகுகளும் பொருந்தும்படி அமைப்பது தொடர்நிலைச் செய்யுள் அல்லது **காப்பியம்** எனப்படும். கொங்குவேளிர் சமண மதத்தைச் சேர்ந்தவர் ஆதலின், இந்நூலின் கண் பல இடங்களில் சமண சமயக் கொள்கைகள் காணப்படுகின்றன.

பெருங்கதை யென்னும் இந்நூல் உதயணன் என்ற மன்னனது வரலாற்றை உணர்த்துகின்றது. இது **உஞ்சைக் காண்டம், இலாவண காண்டம், மகத காண்டம், வத்தவகாண்டம், நரவாண காண்டம்** என்னும் ஐந்து பிரிவுகளைக் கொண்டு விளங்குகின்றது. அவற்றுள் நரவாண காண்டம் என்னும் பகுதியில் காணப்படும் வரலாறுதான் மேலே தரப்பட்டதாகும். இஃது சுவை பொருந்திய பெருங்கதையின் மற்றப் பகுதிகளையும் மாணவ, மாணவியர் படித்து இன்புறுதற்குத் துணை புரியும் என்பது ஒருதலை.